OCT. '51

376

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

376
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - NOV 951
MADRAS

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இப்போது 8200 பேருக்குமேல் இதில் நிரந்தர அங்கத்தினராக இருக்கிறார்கள். இமயம் முதல் குமரிவரையிலும் இன்னும் இலங்கை, மலேயா, முதலிய வெளிநாடுகளிலிருந்துங்கூட பல அங்கத்தினர்கள் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

உங்களுக்கு இதில் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுது கூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் கண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஆனால் தலைக்கு மூன்று கூபன் வீதம் தான் அனுப்பவேண்டும். அவ்வப்போது கண்ணனில் போட்டிகள் வெளியாகின்றன. சென்ற மாதம் 'டைம்பீஸ் பரிசுப் போட்டி' ஒன்று வெளியாகியிருக்கிறது. இதில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். மற்றவர்கள் கலந்து கொள்ளவேண்டுமானால் 3 கூபன்களுடன் கதையை அனுப்பலாம்.

கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்

குடும்பச் சந்தா
ரூ. 12/-

பொருளடக்கம்

மலர்: 2 இதழ்: 10

	பக்கம்
குழந்தைகளே !	.. 3
காந்தி வாக்கு - அழ. வள்ளியப்பா	.. 4
உயர்ந்த பதவி - எம். எஸ். ஸ்ரீநிவாஸன்	.. 6
கிரிக்கெட் கற்றுக் கொள் - ராம்சிங்	.. 9
பொன் வண்டு - 'ஆர்வி'	.. 13
முட்டாள் கழுதை - ஈசாப் கதை	.. 19
கல்லாட்டம் - ராகவேந்திரன்	.. 20
பேனாத் திருடன் - என். எஸ். ஸ்ரீ.	.. 21
பொழுது போக்கு - டி. வி. ரங்கசாமி	.. 25
கீரியும் பிள்ளையும் - சோமசன்மா	.. 26
குட்டிக் கதைகள் - ராமசர்மா	.. 29
பெருக்கல் விநோதம் - சுந்தரராமன்	.. 32
பர்ஸாத் - கே. சந்திரமௌலி	.. 33
கண்ணன் கழக அங்கத்தினர்கள்	.. 35
சின்னராஜா - 'வாசகன்'	.. 37
குயிலே, கூவிடு! - கி. சொர்ணவேலு	.. 41
கோடைக்கானல் - வி. எஸ். இந்திராணி	.. 42
சீனிக் கண்ணாடி - ரமணி	.. 45
கேட்டீர்களா!	.. 49
எண்ணிலே படங்கள் - 'மூட்டை'	.. 50
சாதுப் பிள்ளை - 'சுண்டு'	.. 51
அசட்டுப் பிசட்டுப் பாடல் - பாக்கியலக்ஷ்மி	.. 52
கண்ணன் தபால்	.. 53

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

பிரிக்கப் பிரிக்கப்
பிரமிக்கவைக்கும்

கண்ணன்
தீபாவளி மலர்

ஜிலு ஜிலு என்று
தயாராகிறது

வர்ணப் படங்கள்,
அற்புதக் கதைகள்.
தீபாவளி அன்றே
கிடைக்கும்.

இன்றே உங்கள் ஊர் ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள். பிறகு போன வருஷம் மாதிரி கிடைக்க வில்லை என்று குறை சொல்லாதீர்கள்.

ரிஜிஸ்தர் தபாலில்
ரூ. 1-4-0

மானேஜர்-கண்ணன்-மயிலாப்பூர்.

தம்பிகளே! தங்கைகளே!
மிட்டாய் வெளியீடு: 5-வது ஸெட்
வெளிவந்துவிட்டது!

'ராஜன்'
எழுதிய
அற்புதமான
கதைப் புத்தகங்கள்
இரு வர்ண அட்டை!

1. புது வேலை
2. பம்பாய் வளையல்
3. காற்றுடி
4. ஒரு நாள் கூத்து

ஒவ்வொன்றும்
விலை 1 அணாதான்

உங்கள் ஏஜெண்டிடம் உடனே கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். கிடைக்கா விட்டால், ''ஜில் ஜில் பதிப்பகம், தபால்பெட்டி 1793, சென்னை-1'' என்ற விலாசத்துக்கு 0-4-9 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன்

விவரங்களுக்கு:

ஜில் ஜில் பதிப்பகம்

தபால் பெட்டி 1793
சென்னை—1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - NOV 1951
MADRAS

குழந்தைகளே!

கண்ணன் இதழில் வரும் விஷயங்களைப் பாராட்டிப் பல ஆசிரியர்களும், பெற்றோர்களும், குழந்தைகளும் எழுதி வருகிறார்கள். இது எங்களுக்கு எவ்வளவோ பெருமையாக இருக்கிறது. ஆனால் அதிலுள்ள குறைகளையும் சேர்க்கவேண்டிய அம்சங்களையும் பற்றி யாரும் எழுதுவதே இல்லை. கண்ணன் சம்பந்தப்பட்ட வரையில் நீங்கள் கொஞ்சமும் தயங்காமல் எழுதலாம்.

கண்ணன் ஆரம்பித்த முதல் வருஷத்திலேயே அருமையாக ஒரு மலர் தயாரித்து உங்களின் பேரன்பைப் பெற்றிருக்கிறோம். அந்த அன்பின் சின்னமாகவே இந்த வருஷமும் கண்ணன் தீபாவளி மலரைக் கொண்டு வருகிறோம். போன வருஷம் பல குழந்தைகள் மலர் கிடைக்காமல் வருத்தப்பட்டு எழுதினார்கள். நாங்கள் என்ன செய்வது? அளவாகவே அச்சிட்டோம். அதனால் அவர்கள் வருத்தத்தைப் போக்க முடியவில்லை. இந்த வருஷமும் கால நிலைமை அப்படி ஒன்றும் சீர்ப்பட்டு விடவில்லை. காகித விலை முதலியவையெல்லாம் இன்னும் கூடக் கஷ்டமாகத்தான் இருக்கின்றன. ஆகவே அளவாகவே தான் இப்பொழுதும் அச்சிடுகிறோம். முந்திக்கொண்டு சொல்லி வைத்து வாங்கும் குழந்தைகள் பாடு தான் யோகம். கிடைக்காதவர்கள் வாங்கிய குழந்தைகளிடம் கேட்டுப் படிக்கவேண்டியது தான். அப்படியும் கிடைக்கா விட்டால் அடுத்த வருஷமாவது முந்திக்கொள்ள வேண்டியது தான்

எல்லாம் சரி; மளர் எப்படி இருக்கும் என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? அதையும் சொல்லிவிடுகிறேன்.

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், மஞ்சரி ஆசிரியர் தி.ஜ.ர., கொத்தமங்கலம் சுப்பு, அழ. வள்ளியப்பா த. நா. குமாரஸ்வாமி, பெ. நா அப்புஸ்வாமி, குகப்ரியை, ஸேனா, ஜாஜலி, ராஜன் முதலியோர் எல்லாம் எழுதுகிறார்கள். நடக்கும் வாத்து என்று வெட்டி ஒட்டும் வர்ணப் படம் ஒன்று வருகிறது. விளையாடும் கட்டம் ஒன்று வருகிறது. பிரசித்தி பெற்ற ஸ்டுடியோ ஒன்றின் படங்கள் வருகின்றன. சித்திரக் கதை, படக் கதை - என்று இன்னும் இப்படியே சொல்லிக் கொண்டே போனால் அப்புறம் உங்களுக்கே சுவாரஸ்யம் குன்றிவிடும். அதனால் நிறுத்திக்கொள்கிறேன்.

விலை மட்டும் ஞாபகத்தில் இருக்கட்டும் ஒரு ரூபாய். நல்ல காகிதம்; நல்ல மூவர்ண அட்டை. உள்ளெல்லாம் ஒரே படங்கள் மயந்தான், போங்களேன்! பட்டாஸ் ஒரே நிமிஷத்தில் வெடித்துத் தீர்ந்து போகும். ஆனால் மலர் பிரிக்கும் போதெல்லாம் உங்களை மகிழ்வித்துக்கொண்டே இருக்கும்.

இனி மலர் நிச்சயமாகக் கிடைக்க ஒரு வழி சொல்கிறேன். உங்கள் ஊரில் கண்ணன் ஏஜெண்ட் இருந்தால் அவரிடம் சொல்லிப் பதிவு செய்துகொண்டு விடுங்கள். ஏஜெண்டு இல்லையானால் நேரே எங்களுக்கு ஒரு ரூபாய் ஒரணா அனுப்பிவையுங்கள். இந்த ஒரணா எதற்குத் தெரியுமா? தபால் செலவுக்குத்தான். நீங்கள் கண்ணன் மெம்பராக இருந்தால் ஒரு ரூபாயும் உங்கள் நம்பரும் எழுதிவிட்டால் போதும். அந்த ஒரணாவும் அனுப்ப வேண்டாம். திருப்திதானா?

— ஆசிரியர்

காந்தி வாக்கு

அழ. வள்ளியப்பா

சென்னையி லிருந்து மதுரைக்குச்
சென்றேன் ரெயிலில், அன்றொருநாள்.
இரவு முழுதும் வண்டியிலே
இருந்தேன். மறுநாள் காலையிலே,
திருச்சி வந்தது. பலகாரம்
தின்றிட இறங்கிச் சென்றேனே.
வடையும் காபியும் அங்கொருவர்
வைத்து விற்றனர். பார்த்ததுமே,
பைக்குள் கையை விட்டேனே.
பணத்தை விரைவாய் எடுத்தேனே.
எடுத்து அவரிடம் கொடுத்தேனே.
எனது பசியைத் தீர்த்தேனே.
மறுபடி வண்டியில் ஏறியதும்,
வண்டி நகர்ந்தது, விரைவுடனே.
வண்டி நகர்ந்ததும் எங்களிடம்
வந்தார், டிக்கெட் சோதகராம்.
"எங்கே, உனது டிக்கெட்டை
எடுப்பாய்" என்றார் அம்மனிதர்.
உடனே, பைக்குள் கைவிட்டேன்;

உள்ளே காணோம் டிக்கெட்டை.
'ஐயோ!' என்றேன்; திடுக்கிட்டேன்;
அலசிப் பார்த்தேன்; பயனில்லை!
'பலகா ரத்தை வாங்கிடவே
பணத்தை விரைவாய் எடுக்கையிலே
டிக்கெட் கீழே வீழ்ந்திருக்கும்'
-நினைத்தேன், இப்படி. அதற்குள்ளே,
"ஏனோ தம்பி, நடிக்கின்றாய்?
என்னை ஏய்த்திட முடியாது!
எடுப்பாய் பணத்தை இருமடங்கு.
இங்கே எதுவும் பலிக்காது!"
என்றார். அவரிடம் உண்மைதனை
எடுத்துக் கூறியும் பயனில்லை!
அத்தனை பேர்கள் மத்தியிலே
அவமானத்தால் தலைகுனிந்தேன்.
உண்மை உரைத்தேன்; ஆனாலும்
என்னை நம்பா திருந்ததேன்?
கவனக் குறைவே இத்தனைக்கும்
காரணம் என்பதை நன்குணர்ந்தேன்.
'சத்தியம் பேசும் மனிதனுக்குத்
தகுந்த கவனமும் வேண்டு'மென
காந்தித் தாத்தா சொன்னதென்
காதில் ஒலித்தது, அச்சமயம்.

உயர்ந்த பதவி

எம். எஸ். ஸ்ரீநிவாஸன்

1

பாரஸீக தேசம் அப்பொழுது உன்னத நிலையில் இருந்தது. அந்தக் காலத்தில் பாலைவனத்தைத் தாண்டி இருந்த ஒரு மலையில் ஓர் ஆட்டிடையன் வாழ்ந்துவந்தான். அவன் ஏழை; வயதானவன். ஒரு மலைக் குகையே அவன் வீடு. கைத்தடியே அவன் துணை. பகலில் போர்வையாகவும் இரவில் படுக்கையாகவும் உதவிய ஓர் ஆட்டுத் தோலை அவன் பெரிதாக மதித்துப் பாராட்டி வந்தான்.

அந்த இடையனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது; ஆயினும் அவன் உலக அநுபவம் நிறைந்தவன். இயற்கையே அவன் படித்த புத்தகம். வாழ்க்கையிலிருந்து அவன் எவ்வளவோ தெரிந்துகொண்டான். மிகவும் சிறந்த புத்திமானாக விளங்கினான்.

நாட்கள் செல்லச் செல்ல, அருகிலுள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் இருந்த மக்கள் அவனைப் பற்றித் தெரிந்துகொண்டார்கள். துக்கமோ கஷ்டமோ நேரிட்டபோதெல்லாம் யோசனை கேட்க அவனிடம் வந்தார்கள்.

அந்த இடையன் ஒவ்வொருவருடைய குறையையும் பொறுமையோடு கேட்பான். துக்கத்தை மாற்ற ஆறுதல் வார்த்தை சொல்லுவான். அதிருப்தியோடு வந்தவர்கள் சந்தோஷமாகத் தம் ஊருக்குத் திரும்பிப் போவார்கள்.

2

கொஞ்சம் கொஞ்சமாக இடையனின் புகழ் நாடெங்கும் பரவிற்று. பாரஸீக நாட்டை ஆண்ட ஷாவும் இதைப் பற்றிக் கேள்விப்பட்டான். அப்போது அந்த மாகாணத்துக்கு ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டியிருந்தது. ஆகையால், இடையன் ஒருவன் சிறந்த அறிவாளியாக இருக்கிறான் என்று கேட்டதும் அவனைப் பார்த்துப் பரீட்சிக்க ஷா எண்ணம் கொண்டான்.

அடிக்கடி மாறுவேஷம் பூண்டு நாடு சுற்றி வருவது ஷாவின் வழக்கம். அதன்படி ஒரு நாள் பரம ஏழைபோல் உடை உடுத்தி, கோவேறுக் கழுதை ஒன்றின் மேல் ஏறி, அறிவுடைய இடையனைத் தேடி பாலைவனத்தில் பிரயாணம் செய்தான்.

பாலைவனத்தில் ஷா நெடுந்தூரம் போனான். கடைசியில் ஓரிடத்தில் ஆட்டுமந்தை ஒன்று நின்றது. அங்கே வந்து சேர்ந்தான் ஷா.

அருகிலிருந்த குன்றின் குகையிலிருந்து வெளிவந்தான் இடையன். யாரோ நிற்பதைப் பார்த்தான். தலை வணங்கினான். ஷாவோ பேசாமல் நின்றான். "ஐயா! இங்கே வாருங்கள். மிகவும் களைத்திருக்கிறீர்களே. ஆட்டுப்பால் சாப்பிடுகிறீர்களா?" என்று அவனை அழைத்து அன்புடன் உபசரித்தான் இடையன்.

மாறுவேஷம் பூண்டிருந்த ஷா குகைவாசலுக்கு வந்தான். உடனே இடையன் தன் ஆட்டுத் தோலை எடுத்து, பெரிய ரத்தினக் கம்பளத்தை விரிப்பது போலத் தரையில் விரித்தான்

"உட்காருங்கள். நீங்கள் தலைநகரிலிருந்து வருகிறீர்கள்போல் இருக்கிறதே!" என்றான் இடையன்.

"ஆமாம்; நாம் வெகுதூரம் செல்லவேண்டிய ஓர் ஏழைப் பிரயாணி" என்றான் ஷா.

அதைக் கேட்ட இடையன் ஷாவை மறுபடியும் தாழ்ந்து வணங்கினான். "பிரபூ! மன்னிக்க வேண்டும். இந்த ஏழை இடையன் இப்போது இந்த நாட்டின் சர்வ வல்லமை படைத்த ஷாவுடன் பேசிக்கொண்டிருக்கிறான்; இல்லையா?" என்றான்.

ஷாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மிகவும் ஆச்சரியமடைந்தான். "ஆம், உண்மைதான். ஷாவும் தனது பிரஜைகளில் அதி புத்திசாலியான ஒருவனோடு இப்போது பேசிக்கொண்டிருக்கிறான்! ஆனால் அவன் எப்படி நம்மைக் கண்டுகொண்டான் என்பதை நமக்கு அறிவிக்கலாமா?" என்றான்.

"அதொன்றும் பிரமாதமில்லையே! தங்கள் மீது படிந்திருக்கும் தூசியே தாங்கள் வெகு தூரத்திலுள்ள தலைநகரிலிருந்து வருவதைக் காட்டுகிறதே. என்னதான் உருவத்தை மாற்றிக்கொண்டாலும் தலை வணங்குவதையும் ஷாவுக்கே உரிய 'நாம்' என்ற பதத்தையும் தங்களால் மாற்றிக்கொள்ள முடியாதே!" என்றான்.



பாதுஷா அவன் அறிவை மெச்சி அவனை அந்த மாகாணத்தின் ராஜப்பிரதிநிதியாக்கினான். இடையன் மலைக் குகையை விட்டு ஓர் அழகிய சிறு மாளிகையில் குடியேறினான். சிறந்த ஆடைகளை அணிந்தான். அவனுக்கு எல்லாவித சௌகரியங்களும் கிடைத்தன.

அவன் ராஜப்பிரதிநிதியானதற்காக மக்களும் மகிழ்ந்தார்கள்.

3

ஆனால் அந்த மகிழ்ச்சி அப்படியே தொடர்ந்து இருக்கவில்லை. சிறிது காலம் சென்றதும் சிலர் பொறாமையினால் புது ராஜப் பிரதிநிதியைக் குறித்து இழிவாகப் பேசத் தொடங்கினார்கள். அவன் போகுமிடமெல்லாம் அவன்கூட மெய்காப்பாளர்கள் முதலிய பரிவாரங்கள் போவது வழக்கம். அவற்றுள் ஓர் ஒட்டகமும் இருந்தது அதன் முதுகில் ஒரு பலமான பெட்டி; அதற்கு இரட்டைப் பூட்டுக்கள். அந்தப் பெட்டியுள் என்ன இருக்கிறது என்று ஒருவருக்கும் தெரியவில்லை; தெரிந்துகொள்ளவும் முடியவில்லை.

"ஏன் அதை அவ்வளவு ஜாக்கிரதையாகக் காப்பாற்றுகிறான்? அதனுள் என்ன இருக்கிறது?" என்று ஒருவன் மற்றவனைக் கேட்டான்.

"ஒருவேளை நாம் தரும் வரிப் பணத்தை அவன் அந்தப் பெட்டிக்குள் போட்டு வைக்கிறானோ?" என்று சந்தேகப்பட்டான் இன்னொருவன்

"அப்படித்தான் இருக்கும். நாம் தரும் வரிப்பணம் ஷாவுக்கே சொந்தம். இவன் எடுத்துக்கொள்வது அநியாயம்" என்றான் மற்றொருவன்.

இப்படியாகப் பலர் சந்தேகப்பட்டு வம்பு பேசினார்கள். வம்பு வதந்தியாகப் பரவியது. அதனால் வசூலும் சரியாக ஆகவில்லை. விரைவில் அவனைப்பற்றி அவ

தூறு கிளம்பிற்று. ஷாவின் காதுக்கும் இது எட்டியது.

ஷாவினுல் இந்த அபவாதத்தை முதலில் நம்ப முடியவில்லை. ஆனுல் வரிப்பணம் சரியாக வந்து சேரவில்லையே! அதனுல், 'சரி, இதை நேரிலேயே பார்த்து விடுவது' என்று முடிவு செய் தான். இந்த முறை ஷா மாறு வேஷம் கொள்ளவில்லை. அரச பரிவாரத்தோடு கிளம்பினுன்.

4

ராஜப்பிரதிநிதி ஒரு குதிரை மீது ஷாவை எதிர்கொண் டழைக்க வந்தான். அவனைச் சுற்றி மெய்காப்பாளர் களும் பிரபுக்களும் இருந்தனர். மிக அருகிலேயே ஓர் ஒட்டகம் இருந்தது. அதன் மேல் பெரிய பெட்டி ஒன்று காணப்பட்டது. அதைப் பார்த்த ஷாவின் முகம் கோபத்தால் சிவந்தது. "ஏ, திருடா! நம் காதில் விழும் கதை களெல்லாம் என்ன, உண்மையா, சொல்!" என்று கர்ஜித்தான். அவனைப்பற்றிக் கேள்விப்பட்ட சில கதைகளையும் சொன்னுன் ஷா.

ராஜப்பிரதிநிதி தலையை அசைத்தான். "இல்லை; நான் எதையும் திருடவில்லை! பாதுஷா வுக்குச் சொந்தமான எதுவும் அந்தப் பெட்டியில் இல்லை!" என்ருன் அடக்கமாக.

"என்ன? நமக்குச் சொந்தமில் லாதது வேறு உன்னிடம் இருக் கிறதோ? எங்கே, அப்படியானுல் அதைத் திறந்து காட்டு, பார்ப் போம்" என்று ஷா உறுமினுன்.

ராஜப்பிரதிநிதி உடனே தன் ஒட்டகத்தின் அருகே சென்ருன். அதைத் தொட்டான். குறிப்பறிந்த ஒட்டகம் கீழே படுத்தது. தன் னிடமிருந்த சாவியை எடுத்து ராஜப்பிரதிநிதி பெட்டியைத் திறந்தான்.

சுற்றியிருந்த எல்லாரும் ஆவ லோடு கவனித்தார்கள். அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்று எட்டிப் பார்த்தார்கள். ஷா மட்டும் அசையாமலிருந்தான். ராஜப்பிரதிநிதி அந்தப் பெட்டியி லிருந்து பொன்னை எடுக்கவில்லை; நகையை எடுக்கவில்லை; அதனுள்ளிலிருந்த ஓர் ஆட்டுத் தோலை மட்டும் எடுத்து ஷாவிடம் காட்டினுன். பெட்டியில் வேறு எதுவுமே இல்லை.

தான் அணிந்த உயர்ந்த ஆடை களைக் கழற்றிக்கொண்டே அவன், "பிரபோ! இதோ இதுதான் என் ஆஸ்தி; என் உற்ற நண்பன். இதை நான் பத்திரமாகக் காப்பாற்றி வந் தேன். மலையில் நான் ஏழை இடையனுக வாழ்ந்த நாளை இது எனக்கு நினைப்பூட்டியது. எனக்கு இந்தப் பதவி கிடைத்த போதும் என் பழைய நிலையை நான் மறக்கவில்லை. என்றும் அடக்கமாக இருக்கவே நான் ஆசைப்படுகிறேன். என் நிலையை இது நினைவூட்டு கிறது. மேலும் ஒரு நாள் நீங்கள் என்னைப் பதவியிலிருந்து நீக்கி விட்டால் பழையபடி ஏழை யாகும்போது இது உதவும் என்று நினைத்தேன்" என்ருன். பிறகு தன் ஆட்டுத்தோலை எடுத்து மேலே போர்த்திக்கொண் டான்.

இதைக் கேட்ட ஷா கண்ணீர் பெருக நின்ருன். தன் உண்மை ஊழியனின் கையைப் பிடித்துக் கொண்டு, "அறிவிலும் ஒழுக்கத் திலும் சிறந்த மேதையே! இந்த நிமிஷம் முதல் நீயே என் பிரதானிகளில் தலைமையான வன்" என்று உணர்ச்சியோடு கூறி னுன். எல்லாரும் அந்த அறிஞ னுக்குரிய உயர்ந்த பதவி அது தான் என்று எண்ணினுர்கள்.

கிரிக்கெட் கற்றுக்கொள்

ராம்சிங்

போட்டோ:
எம். டி. வின்ஸெண்ட்

ஸ்குயர் கட் ஆப் தி ரைட் புட்
(Square Cut of the Right Foot)



1. பொதுவான ஆரம்ப நிலை.



2 ஆட்டக்காரரின் தலை அசையாமல் இருக்கிறது. உடம்பின் கனமெல்லாம் இப்படி அப்படித் திரும்ப வசதியாகக் கால்மீது விழுந்திருக்கிறது.



3. பின்னங்கால் பாதம் பந்து வரும் திசையில் நகர்ந்திருக்கிறது. மட்டை உயர்ந்திருக்கிறது. இவ்விதம்தான் மட்டையைப் பிடிக்க வேண்டும்.



4. மட்டை இன்னும் உயர்ந்திருக்கிறது. உடம்பின் நிறையைப் பின்னங்கால் தாங்கிக் கொள்கிறது.



5. பந்தை அடிக்கப் போகிருர். உடம்பை நன்ருகத் திரும்பிக் கொண்டு பலமாகப் பந்தை இப்போது அடிக்க முடியும்.



6. பந்து மட்டையை நெருங்குகிறது. ஓங்கிய மட்டை கீழே வேகமாகத் தணிந்து வந்திருக்கிறது. அதே வேகத்துடன் பந்தில் பட்டால் அடி பலமாக விழும்.



7. பந்து மட்டையில் படும்போது மட்டை கவிழ்ந்து இருப்பதைக் கவனியுங்கள். பந்து தரையிலிருந்து வரும்போதே குறி தவறாமல் இருக்கும். கைகள் இரண்டும் பலமாக அடிப்பதற்காகச் சேர்ந்திருக்கின்றன.



8. பந்தை அடித்து முடித்தாகி விட்டது. பின்னங்கால் கட்டை விரல், மார்பு, அடித்த திசையையே பார்க்கும் முகம் இவற்றையெல்லாம் கவனியுங்கள். கீழே விழாதபடி நன்றாக ஊன்றிக் கொண்டிருக்கிறார்.

பொன் வண்டு

'ஆர்வி'

இருள் அந்தப் பெரிய சமவெளியைக் கவிந்துகொண்டு வந்தது. சம்பு தன் குடிசையின் வாசலில் உள்ள மரக்கிளையில் உட்கார்ந்து, அந்தப் பரந்த சமவெளியைப் பார்த்துக்கொண்டிருந்தான். காலையில் ஆகாரம் தேடிக்கொண்டு வரச் சென்ற அவன் சகோதரன் சம்பரனை இன்னும் காணவில்லை.

அவனும் அவன் சகோதரனும் சாப்பிட்டு இரண்டு நாட்களாயின. பெற்றோர் அற்ற அந்தச் சகோதரர்கள் இருவர் மட்டுமே அந்தக் குடிசைவாசிகள். இரண்டு நாள் விடாது பெய்த மழையினால் அவர்களுக்கு ஆகாரமே கிடைக்கவில்லை. இன்றுதான் மூத்தவனான சம்பரன் கிளம்பிப் போயிருந்தான். அவனுடைய வரவைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் சம்பு.

தூரத்தில் யாரோ தள்ளாடித் தள்ளாடி நடந்து வருவதைச் சம்பு கண்டான். அப்படி வருபவர் அருகில் வர வர, அவர் ஒரு வயதான கிழவர் என்பது தெரிந்தது. அவர் பசியினாலும் தள்ளாமையினாலும் களைத்துப் போயிருந்தார்.

சம்புவுக்கு அந்தக் காட்சி பரிதாபமாய் இருந்தது. வேகமாக மரத்தை விட்டு இறங்கினான். குடுகுடென்று ஓடிப்போய் அந்தக் கிழவரைக் கீழே விழாமல் பிடித்து அழைத்துக்கொண்டு வந்தான். அவரை ஆசுவாசப்படுத்தி, தண்ணீர் குடிக்கக் கொடுத்து, உபசாரம் செய்தான். கிழவர் மெல்லக் களைப்பு நீங்கினார்.

இதற்குள் நன்றாக இருட்டி விட்டது. ஆகாரம் தேடிவரச் சென்றிருந்த சம்பரன், "சம்பு,



சம்பூ!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான். அவன் முகத்தில் அவ்வளவாக உற்சாகமில்லை. கையில் ஒரே ஒரு சிறிய துணி மூட்டைதான் இருந்தது.

"என்ன அண்ணு! நீ கொண்டு வந்திருப்பது ஒரு வயிற்றுக்கே காணுதுபோல் இருக்கிறதே! இதோ நமக்கு இன்று ஓர் அதிதி வேறு வந்திருக்கிறாரே!" என்றான் சம்பு.

சம்பரன் கிழவரைப் பார்த்து அவரை நமஸ்கரித்தான். பிறகு சம்புவிடம், "அதனால் என்ன? இருப்பதைத் தாத்தாவிடம் கொடுத்துவிடு. நாம் என்ன சிறு பிள்ளைகள் தானே! நாளைக்கு எப்படியாவது பார்த்துக்கொண்டால் போகிறது!" என்றான்.

சம்பரன் சொன்னதைக் கிழவர் கவனித்துவிட்டார். "அருமைக் குழந்தைகளே! வாருங்கள். நீங்கள் இரண்டு நாளாகவே பட்டினி என்று தெரிகிறது. ஆகையால் இருப்பதை மூவருமாகச் சாப்பிடலாம்" என்றார்.

அந்த இளைஞர்களுடைய உபசாரத்தையும் உதாரகுணத்தையும் கண்டு அந்தப் பெரியவர் மனம் குளிர்ந்தது. விடியற்காலையில் அவர் அந்தச் சகோதரர்களை அருகில் அழைத்தார். அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவர் கையில் எங்கிருந்தோ ஒரு பொன்னிறமான பெரிய வண்டு பறந்து வந்து உட்கார்ந்துகொண்டது. அதை அந்தப் பெரியவர் சம்புவிடம் கொடுத்து, "உங்களுக்கு இனி ஒரு கஷ்டமும் ஏற்படாதிருக்கவேண்டும். இந்த வண்டை ஒரு மெல்லிய கயிற்றில் கட்டிக் கையில் பிடித்துக் கொள்ளுங்கள். அது எங்கெல்லாம் பறந்துபோகிறதோ, அதன் பின்னுலேயே செல்லுங்கள். என்ன ஆனாலும் அந்த வண்டைமட்டும் விட்டுவிடாதீர்கள். உங்களுக்குச் சர்வமங்களமும் உண்டாகும்" என்று ஆசீர்வதித்தார். பிறகு அவர் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்.

சம்புவும் சம்பரனும் அந்தப்பெரிய மகான் சொன்னபடியே அந்தப் பொன்வண்டை ஒரு நூலில் கட்டிப் பிடித்துக்கொண்டார்கள். உடனே அந்த வண்டு பறக்கத் தொடங்கியது. சகோதரர்கள் இருவரும் அதைப் பின்பற்றிச் செல்லத் தொடங்கினார்கள்.

சமவெளியைக் கடந்து, பல சோலைகளையும் காடுகளையும் மேடுகளையும் வன வனாந்திரங்களையும் கடந்து, அவர்கள் அந்த வண்டைப் பின்பற்றியே போய்க்கொண்டிருந்தார்கள். போகும் வழியிலேயே கிடைத்த கனிகளையும் கிழங்குகளையும் தின்று பசியாறினார்கள். இப்படி இரவு பகல் நடந்து பல நாட்கள் சென்றதும் ஒரு பெரிய மலையடிவாரத்தை அடைந்தார்கள். சுற்றிலும் அடர்ந்த காடு. மிருகங்கள் எல்லாம் கூட்டம் கூட்டமாகச் சுற்றித் திரிந்தன. அதையெல்லாம் தாண்டி, அந்தப் பொன்வண்டு அவர்களை ஒரு பெரிய மலைக்குகை வாயிலில் கொண்டுவந்து சேர்த்தது.

அந்த மலைக் குகை ஒரேயடியாக இருண்டு கிடந்தது. சம்புவும் சம்பரனும் உள்ளே நுழையத் தயங்கினார்கள். ஆனால் என்ன ஆச்சரியம்! பொன்வண்டு உள்ளே பறந்து சென்றதும் நவரத்தினப் பிரகாசம் போல் குகையே ஒளி வீசிற்று. பல படிகளையும், பள்ளங்களையும் இடிசல்களையும் தாண்டி

குகைக்குள் போய்க்கொண்டேயிருந்தார்கள். கடைசியாக அந்த வண்டு சம்பரனுடைய தோள்மீது உட்கார்ந்துகொண்டது. அந்த இடத்தை அப்போதுதான் அவர்கள் கவனித்துப் பார்த்தார்கள். பாறையெல்லாம் ஒரே தங்கப் பாளமாய் இருந்தது. கற்கள் எல்லாம் ரத்தினமும் கோமேதகமும் வைரமும் வைடூரியமுமாக இருந்தன. முத்தும் பவழமும் குன்றுகளாகவே குவிந்திருந்தன. அங்கே இருந்த இந்த அளவற்ற ஐசுவரியத்தைக் கண்ட சகோதரர்கள் பிரமித்துப் போனார்கள். எப்படி இதை எடுத்துக்கொண்டு போவது என்று மலைத்தார்கள். அந்த மதானையும் அவருடைய மகத்துவம் வாய்ந்த பொன்வண்டையும் மனசார வாழ்த்தினார்கள். "ஆகா, ஒரு சக்கரவர்த்தியின் பெரிய சாம்ராஜ்யத்தைவிட அதிக விலை மதிப்புள்ளதாக இருக்கும்போலிருக்கிறதே!" என்றான் சம்பரன்.

"அதோ பார், அண்ணா!" என்று கையைச் சுட்டிக் காட்டினான் சம்பு.

தங்கத்தினாலேயே ஆன கோணிகள், குதிரைகளின் சேணங்கள், கடிவாளங்கள், வைரம் பதித்த வாட்கள் - இவற்றைத்தான் பார்த்துவிட்டுச் சம்பு கூவினான்.

எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் அந்தக் கோணிகளில் போட்டு நிரப்பி மூட்டையாகக் கட்டினார்கள். அவர்கள் நிரப்பியது போக மீதியைப் பார்த்தால் அவர்கள் எடுத்ததே தெரியவில்லை.

"அண்ணா! இதோ சேணங்கள் இருக்கின்றன. பக்கத்தில் உள்ள காட்டில் ஏதாவது குதிரைகள் கிடைத்தாலும் கிடைக்கும்! நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான்.

பொழுது புலர்ந்ததும் சம்பு குகை வாயிலிலிருந்து, "அண்ணா, அண்ணா!" என்று கூவினான். அழகான இரண்டு குதிரைகளைப் பிடித்துக்கொண்டு வந்திருந்தான் அவன்.

சம்பரனுடைய குதிரைமீது தங்கக் கோணிகளை ஏற்றிவிட்டு, சம்பு தன் குதிரைமீது ஒன்றும் ஏற்றாமல் நின்றான்.

"ஏன் சம்பு, நிற்கிறாய்?"

"அண்ணா! மூட்டைகள் இங்கே இருக்கட்டும். அந்தப் பொன் வண்டை மேலும் நாம் பின்பற்றிப் போகலாம். அது இன்னும் எங்கெல்லாம் போகிறதோ, பார்த்துவிடலாம்!" என்றான் சம்பு.

"வேண்டாம்" என்றான் சம்பரன்.

"அப்படியானால் நான் மட்டுமாவது போய்வர அநுமதி கொடு!" என்றான் சம்பு.

கடைசியாக ஒருவிதமாய்ச் சம்மதித்தான் சம்பரன். தம்பியுடைய ஆசையைக் கெடுக்க அவன் விரும்பவில்லை.

"ஏதாவது ஆபத்து வந்தால் என்ன செய்வாய், சம்பு?"

"பெரியவருடைய ஆசீர்வாதத்தினால் இதோ வைர வாள் இருக்கிறது, அண்ணா! நீ கவலைப்படாமல் போய் வா!" என்றான் சம்பு.

சம்பரன் தங்கக் கோணிகளை ஏற்றிக்கொண்டு அவனை விட்டுப் பிரிந்து சென்றான்.

பொன்வண்டு 'ஙொய்' என்று ரீங்காரம் செய்துகொண்டே வேறு திசையில் பறந்து சென்றது. ஆறுகளையும் ஏரிகளையும் சுற்றிக்கொண்டு சென்றது. சம்புவின் குதிரையும் வெகு நாள் பழக்கப்

பட்டதுபோல் போய்க்கொண்டேயிருந்தது.

அண்ணனை விட்டுப் பிரிந்து கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன. ஊர் எந்தத் திசையில் இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை. அப்படியிருக்கும் போது ஒரு நாள் சம்பு ஒரு சோலையை நோக்கி வண்டுடன் வந்துகொண்டிருந்தான். எதிரே கவசமணிந்த போர்வீரன் ஒருவன் எதிர்ப்பட்டான். சம்புவையும் அவனை அழைத்துக்கொண்டு பறந்து செல்லும் வண்டையும் பார்த்து அவன் ஆச்சரியப்பட்டான்.

மெல்ல அவன் சம்புவிடம் வந்து, "என்னிடம் அதிசயமான ஒரு வஸ்து இருக்கிறது. அதை நான் உனக்குக் கொடுத்துவிடுகிறேன். அதற்குப் பதிலாக இந்தப் பொன்வண்டை எனக்குக் கொடுப்பாயா?" என்று கேட்டான்.

"அது என்ன வஸ்து?" என்று கேட்டான் சம்பு.

"இதோ பார், இந்தக் கவசம் தான் அந்த விலை மதிப்பற்ற பொருள். இதை நீ அணிந்து கொண்டால் இந்த உலகத்தையே கூட ஜயித்து வெற்றி பெறலாம். நீ அணிந்துகொண்டு, 'போர்வீரர்களும் படையும் வரவேண்டும்' என்று நினைக்க வேண்டியதுதான் தாமதம். உடனே யாராலும் ஜயிக்க முடியாத ஒரு சேனையே உன் முன்னால் வந்து உன் கட்டளைக்காகக் காத்திருக்கும். என்ன சொல்கிறாய்? கொடுக்கிறாயா? எனக்கு இந்தப் பொன்வண்டைப் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருக்கிறது. இப்படியே ஆனந்தமாகச் சுற்றிக்கொண்டிருக்கவே கேட்கிறேன்!" என்றான் அந்த வீரன்.

சம்பு இது உண்மையாக இருக்குமா என்று முதலில் யோசித்தான். நம்ப முடியவில்லை. இருந்தாலும் பார்க்கலாம் என்று மனசுக்குள் வேறு ஒரு முடிவு செய்து கொண்டான். அந்த முடிவை எண்ணிப் பார்த்ததும் அவனுக்கே தன் சாமர்த்தியத்தைக் குறித்துப் பெருமையாக இருந்தது.

"சரி; இந்தா! அந்தக் கவசத்தைக் கொடு. ஆனால் ஒன்று, இப்போதே இதைப் பரீட்சித்துப் பார்ப்பேன். நீ சொன்னபடி நடக்காவிட்டால் என் வண்டை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்!" என்றான்.

"சரி; தாராளமாகப் பார்!" என்று சம்மதித்தான் வீரன்.

சம்பு அந்தக் கவசத்தை வாங்கி அணிந்துகொண்டான். பொன் வண்டை அவனிடம் கொடுத்தான். படைகள் வரவேண்டும் என்று நினைத்தான். அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. பெரிய ஆரவாரம் கேட்டது. கண் மூடிக் கண்திறக்கும் நேரத்துக்குள் ஒரு பெரிய சேனை சமுத்திரமே எதிரே நின்றது.

சம்பு நிதானமடைந்து அந்தச் சேனைத் தலைவனைப் பார்த்து, "அதோ அந்த வண்டைப் பிடுங்கிக் கொண்டு வந்துவிடு!" என்றான்.

அவன் கட்டளை உடனே நிறைவேறியது. "சரி; இனி போகலாம்!" என்றான் சம்பு. சேனைகள் அடுத்த கணமே மறைந்துவிட்டன.

அந்தப் போர்வீரன் சம்புவிடம், "பார்த்தாயா? நம்பிக்கைதானே! இனி என்னிடமே அந்த வண்டைக் கொடுக்கலாம் அல்லவா!" என்று கேட்டான்.

சம்பு சிறிதும் தயங்காமல் வண்

டைக் கொடுத்தான். கொஞ்ச தூரம் போனதும் கவசத்தைப் பார்த்து, 'படைகள் வரவேண்டும்' என்று நினைத்தான்.

ஆனால் ஒன்றையும் காணோம். அவன் கரடியாகக் கத்தியும் படைகளையும் காணோம்; அந்தப் படைத் தலைவனையும் காணோம். அந்தப் போர்வீரன் தன்னை எமாற்றி அந்தப் பொன்வண்டை அபகரித்துக்கொண்டு போய்விட்டானே என்று குதிரைமீது எறிக்கொண்டு அவனைத் துரத்திச் சென்றான்.

போர்வீரன் சம்புவைப் பார்த்ததும் கடகடவென்று சிரித்தான். "தம்பி! இனி அந்தக் கவசம் குப்பையில் எறியக்கூட லாயக்கில்லை. ஒருவனுக்கு ஒரு தடவைதான் அது பலிக்கும். இல்லாவிட்டால் நான் உன்னிடம் கொடுப்பேனா?" என்றான்.

"அப்படியானால் என் வண்டை என்னிடம் கொடுத்துவிடு. இந்தா உன் கவசம்!" என்றான் சம்பு.

"அது நடக்காது! அதிகமாகப் பேசினாயோ அந்தக் கவசத்தையும் பிடுங்கிக்கொள்வேன்" என்றான் போர்வீரன்.

பேச்சு வளர்ந்தது. சண்டை முற்றியது. குகையிலிருந்த வைர வாளின் மகிமை இப்போதுதான் தெரிந்தது. அதன்மீது பட்டதுமே எதிரியின் வாள் இரண்டு துண்டுகளாகிவிட்டது. போர்வீரன் வாளை இழந்து நின்றான்.

"இப்போதாவது மரியாதையாக என் வண்டைக் கொடுத்துவிடு. உன் உயிரைத் தப்ப விடுகிறேன்!" என்று சம்பு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்த வண்டைப்பற்றிக் கொண்டான். ஆனால் என்ன துரதிருஷ்டம்! அவனுடைய மந்திர வாள் அப்போது அந்தப் போர்வீரன் கைக்கு எட்டும்படி இருந்ததால் அதை அவன் பிடுங்கிக் கொண்டுவிட்டான்.

சம்பு பயந்துபோனான். உயிருக்கே ஆபத்து வந்துவிடும்போல் இருந்தது. வண்டை விடாமல்

கவசத்துடன் குதிரையை விரட்டு விரட்டு என்று விரட்டினான்.

போர்வீரன் சும்மா விட்டுவிடுவானா! அவனும் தன் குதிரையை முடுக்கித் துரத்தினான். குதிரைகள் ஒன்றுக்கொன்று சளைத்ததாக இல்லை. இரவு பகல் சளைக்காமல் அன்ன ஆகாரமின்றி காற்றுவேகத்தில் பறப்பதுபோல் ஓடின.

காடு, மலைகளையெல்லாம் கடந்து ஏதோ ஒரு பெரிய நகருக்குள் குதிரைகள் நுழைந்தன. சம்புகளைப்பினால் கீழே விழுந்துவிடக்கூடிய நிலைமையை அடைந்துவிட்டான். எதிரே ஒரு பிரம்மாண்டமான ஏழடுக்கு உப்பரிகை ஒன்று தெரிந்தது. சம்பு ஒன்றையும் கவனிக்கவில்லை. ஆனால் ஏழாவது உப்பரிகையில் நின்று இதைக் கவனித்துக்கொண்டிருந்த ஒருவன் கிடுகிடென்று கீழே இறங்கி ஓடிவந்தான். சம்பு களைத்து விழப்போகும் சமயத்தில் அவன் வந்து பிடித்துத் தாங்கிக்கொண்டு, "சம்பு! இதோ பார்! நான்தான் உன் அண்ணன் சம்பரன்! நாம் இப்போது இந்தத் தேசத்திலேயே பெரிய பணக்காரர்களாகிவிட்டோம்" என்றான்.

சம்பு பெருமூச்சு வாங்க, கவசத்தைக் கழற்றி, "அதெல்லாம் கிடக்கட்டும் அண்ணா! ஜல்தியாக இதை அணிந்துகொள். அதோ ஒரு குதிரையில் ஒருவன் துரத்தி வருகிறான். அதற்குள் ஒரு படை வரவேண்டும் என்று நினைத்துக் கொள்!" என்றான்.

சம்பரன் சிறிதும் தாமதிக்காமல் அவ்விதமே செய்தான். சேனை சமுத்திரமாக ராஜ வீதியையெல்லாம் அடைத்துக்கொண்டு நின்றது. சேனைத் தலைவன் வாய் பொத்திச் சம்பரன் முன் நின்றான்.

"அந்த மந்திரவாளைப் பிடுங்கிக்கொண்டு அந்த வீரனைக் கண் காணாமல் முதலில் விரட்டிவிட்டு வா! பிறகு உனக்கு ஒரு வேலை தருகிறேன்" என்றான் சம்பரன் கம்பீரமாக.

மந்திரவாள் வந்துவிட்டது. போர் வீரன் போன இடம் தெரியவில்லை. இதற்குள் இத்தனை சைனியங்களைக் கண்ட அந்தத் தேசத்து ராஜா ஓடோடி வந்து சம்பரனைக் கண்டு, "நான் சண்டையிடத் தயாராக இல்லை. எனக்குப் பிள்ளையே இல்லை. இருந்த ஒரு பெண்ணும் போய்விட்டது. மூத்த பெண் ஒருத்திதான் இருக்கிறாள். ஆகையால் உனக்கு அந்தப் பெண்ணைக் கொடுத்து இந்த ராஜ்யத்தையும் கொடுத்துவிடுகிறேன். உன் படைகளைப் போகச் சொல்" என்று வேண்டிக்கொண்டார்.

சம்பரன் அவ்விதமே படைகளை மறையச் செய்தான். இனி அந்தக் கவசத்தினால் பயனில்லை என்பது அவனுக்குத் தெரியாது.

சம்பு பொன்வண்டுடன் அந்த ஏழடுக்கு உப்பரிகையின் நிலா முற்றத்தை அடுத்த பெரிய தடாகத்தில் நீராடச் சென்றான். அவன் அதன் கரையில் சிறிதுநேரம் உட்கார்ந்து அந்தத் தடாகத்தின் அழகை ரஸித்துக்கொண்டிருந்தான். தாமரை மலர்கள் அழகாக மலர்ந்திருந்தன. வழக்கம்போல அவன் கையில் சுற்றியிருந்த நூலுடன் வண்டு பறந்து சென்று ஒரு மலரில் உள்ள தேனைப் பருகச் சென்றது.

ஒரு மலரில் போய் உட்கார்ந்

நதோ இல்லையோ, திடீரென்று ஒரு சத்தம் கேட்டது. ஓர் ஒளி மின்னல்போல் வீசியது. அடுத்த கணம் அந்த மலர் இருந்த இடத்திலிருந்து ஓர் அழகிய ராஜசுந்தரி எழுந்தாள்.

"பிரபூ! நமஸ்காரம். முன்பு இதே இடத்தில் ஒரு பெரிய மகான் தவம் செய்து வந்தார். நான் தெரியாத்தனமாக ஒரு வண்டைப் பிடித்து வந்து அவர் தவத்தைக் கலைத்தேன். அவர் தவ வலிமையால் என்னையே வண்டாக்கித் தம்முடன் எடுத்துக்கொண்டு போய் உங்களிடம் கொடுத்துவிட்டார். இப்போதுதான் என் சாபம் நீங்கியது!" என்று சம்புவை வணங்கினாள்.

விஷயம் மெல்லப் பரவியது. அவள்தான் அந்தத் தேசத்து இளைய ராஜகுமாரி என்ற செய்தி ஊர்ஜிதமாயிற்று. ராஜா மீண்டும் ஓடிவந்தார்.

"நல்ல குணம் வாய்ந்த சதோதரர்களே! என் மூத்த குமாரியை உங்களில் பெரியவனான சம்பரனும் வண்டாக இருந்த இளைய குமாரியைச் சம்புவும் மணந்துகொள்ளுங்கள்!" என்று வேண்டிக்கொண்டார்.

ராஜபோகமான கல்யாணத்துக்கு முதல் நாள் எங்கிருந்தோ அந்தக் கிழவர் வந்தவிட்டார். அவர் முன்னிலையில் அந்த இரண்டு கல்யாணங்களும் ஜாம் ஜாம் என்று நடந்தன.

"அந்தக் கவசத்தை நீங்கள் இருவரும் மாற்றி மாற்றி அணிந்து கொண்டால் உங்களிடமே அது என்றும் நிரந்தரமாக இருந்து அந்தப் பலனைக் கொடுக்கும்" என்று அந்த மகான் அவர்களை ஆசீர்வதித்தார்.

முட்டாள் கழுதை

உப்பு தங்கத்தைவிட அவசியமானது என்று ஒரு மனிதன் கேள்விப்பட்டான். அவன் ஒரு கழுதையை வளர்த்து வந்தான். மறுநாள் அவன் அதை ஓட்டிக்கொண்டு கடற்கரைக்கு உப்பு எடுத்துவரச் சென்றான். கழுதையால் எவ்வளவு பாரம் சுமக்க முடியுமோ அவ்வளவு உப்பை அதன் முதுகில் ஏற்றினான். பிறகு திரும்பி வந்துகொண்டிருக்கையில் ஒரு நீரோடை குறுக்கிட்டது. கழுதை உடனே பொத்தென்று அந்த நீரோடையில் குதித்துப் புரண்டது. உப்பெல்லாம் கரைந்து போய்விட்டது. பாரம் நீங்கிய கழுதை நெளித்துக் கொண்டு உல்லாசமாக நடந்தது.

மறுபடியும் அந்த மனிதன் கடற்கரைக்குக் கழுதையை ஓட்டிக்கொண்டு போனான். உப்புப் பொதியைச் சுமத்தி அதே வழியாக ஓட்டிக்கொண்டு வந்தான். கழுதை முன்போலவே அந்த நீரோடையில் குதித்துத் துளைந்தது. உப்பெல்லாம் கரைந்துவிட்டது. சந்தோஷத்துடன் துள்ளி நடந்தது கழுதை.

கழுதையின் தந்திரத்தை உணர்ந்த மனிதன் திரும்பவும் கடற்கரைக்கு அதை ஓட்டிக்கொண்டு போனான். கடற்பஞ்சை எல்லாம் சேகரித்துக் கழுதையின் மேல் பொதியாகச் சுமத்தினான். கழுதைக்குத் தெரியுமா இதன் பலன்? ஓட்டமாக ஓடி நீரோடை வந்ததும் குதித்தது. பாரம் குறைவதற்குப் பதிலாக, தண்ணீரை எல்லாம் பஞ்சு உறிஞ்சிவிட்டதால் தாங்கமுடியாத பளுவாகிவிட்டது. முட்டாள் கழுதை இதை உணராமல் தள்ளாடித் தள்ளாடி வீட்டுக்குச் சுமையுடன் சென்றது. —ஈசாப் கதை.



கல்லாட்டம

ப. ராகவேந்திரன் (R. 757)

தேவை: *10 பேர், தலைவன், 20 சிறிய கற்கள்.*

ஆடும் முறை: ஒவ்வொரு வரிசையிலும் 5 வட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு பையன் நிற்கவேண்டும். ஒவ்வொரு பையனிடமும் 2 கற்கள் இருக்கவேண்டும். தலைவன் விசில் ஊதியவுடன் தனக்கு எதிராக உள்ள வட்டத்தில் ஒரு கல்லை வைத்துவிட்டு மறுபடி தன் இடத்திற்கு ஓட வேண்டும். மற்றொரு கல்லை எடுத்துக்கொண்டு தனக்கு எதிராக உள்ள கடைசி வட்டத்துக்குப் போய் அங்கே ஒரு கல்லை வைத்து விட்டுத் தன் வட்டத்திற்கு வரவேண்டும். இப்பொழுது ஐந்துபிள்ளைகள் நின்ற இடத்தில் ஒவ்வொரு கல்லும், நடு வட்டங்களில் 2 கற்கள் வீதமும் இருக்கும். மறுபடியும் அந்தப் பிள்ளைகள் ஓடி முதல் வட்டத்தில் உள்ள ஒரு கல்லை எடுத்துக்கொண்டு தன் வட்டத்தில் வைத்துவிட்டு மறுபடியும் ஓட வேண்டும். கடைசி வட்டத்தில் இருக்கும் கல்லை எடுத்துக்கொண்டு தன் வட்டத்தில் வைத்துவிடவேண்டும். முன்போலவே இந்த வட்டத்தில் இரண்டு கற்கள் இருக்கும். இதில் யார் முதலில் தன் வட்டத்தில் இரண்டு கற்களை வைக்கிறானோ அவன்தான் வெற்றி பெற்றவன். ஆடும்போது வெகு சுவாரஸ்யமாக இருக்கும்.

பேனாத் திருடன்

என். எஸ். ஸ்ரீ.

2

'சரி; அகப்பட்டுக்கொண்டு விட்டோம்' என்று கோபு தீர்மானித்துவிட்டான்.

உடனே உபாத்தியாயரின் நீண்ட பிரம்பு, பெற்றோர்களின் அடி, பிள்ளைகளின் ஏளனம் - எல்லாம் அவன் மனக்கண்முன்னே தோன்றி அவன் உடம்பை ஓர் உலுக்கு உலுக்கியது.

'அவர்கள் அருகில் வருவதற்குள் பேனாவை வீசி எறிந்துவிட்டால் என்ன? ஆனால் இதை அவர்கள் பார்த்துவிட்டால்...?'

இன்னது செய்வதென்று தெரியாமல் கோபுவின் மனசு தவியாய்த் தவித்தது.

இவன் யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள் அவர்கள் இவன் அருகில் வந்தேவிட்டார்கள்.

"என்னடா இப்படிப்பட்ட ஓட்டம்? கூப்பிடக் கூப்பிடக் காதில் விழவே இல்லை!" என்றான் வந்தவர்களில் ஒருவன்.

"கூப்பிட்டுக்கொண்டே வருகிறாயா என்ன? அதெல்லாம் என் காதில் விழவில்லை. இதோ இப்பொழுது கூப்பிட்டதுதான் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தேன்" என்றான் கோபு.

"சரிதான். நாங்கள் மாத்திரமா கூப்பிட்டோம்? நீ வெளியே வந்தவுடனே உபாத்தியாயர் கை தட்டிக் கூப்பிட்டார். அது உன் காதில் விழவில்லை. அதன்மேல் தான் எங்களை அனுப்பினார்" என்றான் இன்னொருவன்.

"உபாத்தியாயர் கூப்பிட்டாரா?"

"ஆமாம்."

"சரிதான்" - கோபுவுக்கு உபாத்தியாயர் கூப்பிட்ட காரணம் விளங்கிவிட்டது:

'யாரும் பார்க்கவில்லை என்று எடுத்தோம். யாராவது பார்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். அதை உபாத்தியாயரிடம் சொல்லியிருப்பார்கள். அவ்வளவுதான்; கையும் களவுமாகப் பிடித்துவர ஆட்களைத் துரத்தியிருக்கிறார்!'

இது தவிர அந்தச் சமயத்தில் கோபு யோசிக்க வேறு என்ன இருக்கிறது!

"அது கிடக்கட்டும். என்ன வந்துவிட்டது இன்று உனக்கு? ஏன் இப்படி நடந்துகொண்டாய்?" என்றான் முதலில் பேசிய பையன்.

இதற்குக் கோபு என்ன பதில் சொல்வது? பொதுவாக உபாத்தியாயருக்கு விஷயம் தெரிந்துவிட்டது என்று மாத்திரம் ஊகித்துக் கொண்டான்.

இருந்தாலும் பதிலே சொல்லாமல் இருந்தால் நன்றாக இருக்குமா? எதற்கும் கடைசிவரை பார்ப்போம் என்று, "ஏன், என்ன சமாசாரம்?" என்றான்.

"என்ன சமாசாரமா? எங்கே உன் சட்டைப்பையைக் காட்டு, பார்க்கலாம்" என்றான் இரண்டாவது பையன்.

'சரிதான். சோதனை போட்டுப் பார்க்க அனுப்பிவிட்டார் உபாத்

தியாயர்' என்று முடிவு கட்டி விட்டான் கோபு. அவனுடைய கை கால்களெல்லாம் வெடவெடவென்று நடுங்கின. இந்த உலகமே தலை கீழாகச் சுற்றுவதுபோலிருந்தது அவனுக்கு.

'ஒரு நாளுமில்லாமல் எதற்காக இன்று இந்த மாதிரியான காரியத்தைச் செய்தேன்? ஏன் எனக்கு இப்படிப்பட்ட கெட்ட புத்தி ஏற்படவேண்டும்? இனி எது தொலைந்தாலும், யார் எடுத்தாலும் முதல் சந்தேகம் என்மீதுதானே விழும்? "சுந்தரம் எவ்வளவு நல்லவன்! அவனுக்கு எங்கேயிருந்தடா இப்படிப்பட்ட ஓர் பிள்ளை வந்து பிறந்தது?" என்று பார்க்கிறவர்களெல்லாம் கரித்துக்கொட்டப் போகிறார்கள். நாலுபேர் எதிரில் நான் இனி எப்படித் தலை நிமிர்ந்து நடப்பேன்? என்ன காரியம் செய்துவிட்டேன்?' என்று தன்னைத்தானே நொந்து கொண்டான் கோபு.

உடனே கோபு தன் ஜேபியைக் காட்டிவிட்டு, "என்ன இருக்கிறது என் ஜேபியில்? ஒன்றுமில்லையே" என்றான்.

"இன்னுமா தெரிந்துகொள்ளவில்லை? மடியையும் பார்த்துவிட்டுச் சொல்" என்றான் முதல் பையன்.

அவன் அத்துடன் மாத்திரம் நிற்கவில்லை. கோபுவின் மடியைப் பார்ப்பதற்காக அவன் மடியண்டை கையைக் கொண்டு போனான்.

கோபுவுக்கு உயிரே நின்றுவிட்ட மாதிரி இருந்தது. கோபு கொஞ்சம் தைரியசாலி. வேறு யாராவதாக இருந்தால் ஓவென்று கதறியிருப்பார்கள். அல்லது அப்படியே கீழே சாய்ந்திருப்பார்கள். அந்த நிலைமையிலும் அவன் மெதுவாகச் சமாளித்துக்கொண்டு சிறிது ஒதுங்கிப் போய், பேனா இருந்த இடத்தைக் கையினால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "மடியில் என்ன இருக்கிறது?" என்று சொல்லிக்கொண்டே துணியை அவிழ்த்து உதறினான்.

"சரிதான். உனக்கு ஞாபகமே இல்லைபோல் இருக்கிறது. இது யாருடைய 'பர்ஸ்' பாரு!" என்று சொல்லிக்கொண்டே தன் ஜேபியிலிருந்து ஓர் பர்ஸை எடுத்துக் கோபுவுக்குக் காண்பித்தான் அந்த முதல் பையன்.

"இது என்னுடைய பர்ஸ்ஸாயிற்றே. என்னுடைய பெயர்கூட அதில் இருக்கிறதே. அது எப்படி உன்னிடம் வந்தது?" என்றான் கோபு.

இதற்குத்தான் உன்னை உபாத்தியாயர் கூப்பிட்டார். ராமுவின் டவுண்டன் பேனா போன அமர்க்களத்தில், இது உன் ஜேபியிலிருந்து கீழே விழுந்துவிட்டது போலிருக்கிறது. அதை நீ பார்க்காமல் வந்துவிட்டாய். நீ வந்தவுடனே உபாத்தியாயர் அதைப் பார்த்திருக்கிறார். உன்னைக் கூப்பிட்டார். அது உன் காதில் விழவில்லை. உடனே அவர் அதை எங்களிடம் கொடுத்து உன்னிடம் கொடுத்து விட்டுவரச் சொன்னார். நாங்கள் கூப்பிடுகிறோம், கூப்பிடுகிறோம், நீ திரும்பிப் பார்த்தால்தானே? நீ மிகவும் ஜாக்கிரதைக்காரன் என்று பெயர். ஏன் இப்படி நடந்து கொண்டுவிட்டாய்?" என்று சொல்லிக்கொண்டே பர்ஸைக் கோபுவிடம் கொடுத்தான்.

"ராமுவின் பேனா தொலைந்த அமர்க்களத்தில் யாருடைய மனசு தான் சரியாக இருந்தது?" என்று சமாளித்துக்கொண்டான் கோபு.

"சரி! நாங்கள் போய் வருகிறோம்" என்று அந்த இரண்டு பையன்களும் திரும்பிச் சென்றார்கள்.

அப்பாடா! கோபுவுக்குப் போன உயிர் திரும்பி வந்த மாதிரி இருந்தது. தாராளமாக மூச்சுவிட்டான். பாவம்! எப்படிப் பயந்து போனான்!

அன்று சம்பளம் கட்டுவதற்காகத் தகப்பனார் கொடுத்த பத்து ரூபாய் நோட்டைத் தன் பர்ஸில் போட்டுக்கொண்டு வந்தான். சம்பளத்தைக் சட்டிவிட்டு மீதி ரூபாயைப் பர்ஸில் போட்டு அதை ஜேபியில் வைத்துக்கொண்டிருந்தான். அந்தப் பேனா அமர்க்களத்தில் அந்தப் பர்ஸ் கீழே விழுந்திருக்கிறது. அதைக் கோபு கவனிக்கவில்லை. கோபு அப்பொழுது இருந்த நிலைமையில் பர்ஸ் போனது தானா, இந்த உலசமே போயிருந்தால் கூடத் தெரியாதே அவனுக்கு! அப்பொழுது இந்த உலகின் நினைவு இருந்தால்தானே இதையெல்லாம் பற்றி யோசிப்பதற்கு! அவனுடைய மனசு தான் எப்படியெல்லாமோ அலைபாய்ந்து கொண்டிருந்ததே!

'அசட்டுப் பயல்கள்! ஒரு நிமிஷத்துக்குள் என்னைக் காபராபடுத்திவிட்டார்கள்! நல்லவேளை, பர்ஸும் அகப்பட்டது! இல்லாவிட்டால் அப்பா தோலை உரித்துவிடுவார். எல்லாம் இன்று அந்த முக்குருணிப் பிள்ளையார்தான் காப்பாற்றினார்!' என்று மனத்துக்குள் நினைத்துக்கொண்டு கடையில் நான்கு தேங்காய்கள் வாங்கினான். வழியிலிருந்த முக்

குருணிப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று அந்த நான்கு தேங்காய்களையும் உடைத்து விட்டுத்தான் வீட்டுக்குச் சென்றான்.

கடைசியில் வீடு போய்ச் சேர்வதற்குள் அஸ்தமித்துவிட்டது. அதற்கு மேலே பேனாவில் உள்ள ராமுவின் பெயரை அழிக்கும் வேலையில் ஈடுபட்டால் பெற்றோர்கள் என்ன, ஏது என்று கேட்பார்கள். அதற்கு ஏதாவது தாறுமாறாகப் பதில் சொல்லி வைத்தால் அவர்களுக்கு வீண் சந்தேகங்கள் ஏற்படும். ஆகவே அவர்களுக்குத் தெரியாமல் காலையில் பார்த்துக்கொள்ளலாம் அந்த வேலையை என்று முடிவு கட்டி, அந்தப் பேனாவை யாருக்கும் தெரியாத இடத்தில் கொண்டு போய்ப் பத்திரமாக வைத்தான்.

பிறகு சாப்பிட்டுவிட்டுப் படிக்க உட்கார்ந்தான். படிப்பில் புத்தி ஓடினால்தானே? படிக்காவிட்டால் பெற்றோர்கள் கோபித்துக் கொள்வார்கள். அதற்காகப் புத்தகத்தை விளக்கெதிரில் பிரித்து வைத்துக் கொண்டான். மேற்கொண்டு பேனா சம்பந்தமாக என்ன செய்வது என்பதுபற்றித்தான் அவன் மனம் யோசித்துக்கொண்டிருந்தது.

மணி பத்தடித்தது. எல்லாரும் படுக்கச் சென்று விட்டார்கள். கோபுவும் படுக்கச் சென்றான். தூக்கம் வந்தால் தானே! மனத்தில் விசாரம் இருக்கும்போது தூக்கம் எங்கிருந்து வரும்? மாலையில் நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்ணெதிரே வந்து நின்றன.

எல்லாவற்றையும் விட அந்தப் 'பர்ஸ்' சம்பவம்தான் அவனுக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. அதை நினைத்தபொழுது ஒன்றிரண்டு தரம் அவனை அறியாமலே சிரித்துவிட்டான். வெகுநேரம் வரையில் புரண்டுவிட்டுக் கடைசியில் கண் அயர்ந்து போனான்.

கண் அயர்ந்துவிட்டால் என்ன? எத்தனை விதமான சொப்பனங்கள்? எல்லாவற்றிலும் பேனா பற்றிய விஷயந்தான்.

கண்ணயர்ந்து அரைமணி நேரம் ஆகியிருக்கும்.

திடீரென்று அவனுடைய நண்பன் சீனு அவனிடம் வந்து, "நான் டவுனுக்குப் போகிறேன். என்னுடன் வந்தால் பேனாவை விற்றுத் தருகிறேன். அந்தப் பணத்துக்கு வேறு பேனா வாங்கிக்கொள்ளலாம்" என்றான்.

"பேனாவா? ஏது பேனா?" என்றான் கோபு.

"அதெல்லாம் எனக்குத் தெரியும். பேசாமல் நான் சொல்கிறபடி செய்தால் தப்பித்துக்கொள்ளலாம். இல்லாவிட்டால் மிகுந்த கஷ்டம் ஏற்படும்" என்றான் சீனு.

அதற்குமேல் கோபு ஒன்றும் சொல்லாமல் பேனாவுடன் சீனுவைப் பின்தொடர்ந்தான்.

இருவரும் 'மூர்மார்க்கட்'டில் பேனாவை விற்பதற்குப் பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று பின்பக்கமாக யாரோ வந்து தன் கைகளைப் பிடித்ததைக் கண்டு திரும்பிப் பார்த்தான் கோபு.

பார்த்தால் ஒரு போலீஸ்காரன் நின்றுகொண்டிருக்கிறான்!

(தொடரும்)

பொழுதுபோக்கு

டி. வி. ரங்கசாமி



(விடைகள் கடைசிப் பக்கம்)

21178

கீரியும் பிள்ளையும்

சோமசன்மா

ஒரே ஓர் ஊரில் ஒரே ஒரு புருஷனும் பெண்டாட்டியும் இருந்தார்கள். அந்த ஊரில் இன்னும் நிறையப் புருஷன் பெண்டாட்டிகள் இருந்தார்கள். ஆனால் நம்முடைய கதை ஒரே ஒரு புருஷன் பெண்டாட்டியைப் பற்றித்தான். அவர்களுக்குப் பெயர் என்ன என்றுதானே கேட்கிறீர்கள்? புருஷனுக்குப் பெயர் ராமன்; பெண்டாட்டிக்குப் பெயர் ராமி. இரண்டு பேரும் ரொம்ப காலம் சௌக்கியமாக இருந்தார்கள்.

எவ்வளவு சௌக்கியமாக இருந்தாலும் வீட்டில் ஒரு குழந்தை இல்லாவிட்டால் அவர்களுக்குச் சந்தோஷம் இருக்குமா? நீங்கள் வீட்டில் விஷமம் செய்யும்போது உங்களை அம்மா எவ்வளவு திட்டினாலும் நீங்கள் இல்லாமல் அம்மாவால் இருக்க முடியுமா? அதே போலத்தான் ராமனும் ராமியும் குழந்தையில்லாமல் கஷ்டப்பட்டார்கள். இப்படியிருக்கையில் அந்த ஊருக்கு ஒரு பாம்பாட்டி வந்தான். அவனிடம் ஓர் அழகான கீரிப்பிள்ளை இருந்தது. அதைப் பார்த்த ராமி அதை வாங்கித் தரும்படி தன் புருஷனைக் கேட்டாள். ராமன் உடனே வாங்கிக் கொடுத்தான். அதைக் குழந்தையைப் போல் ராமி வளர்த்து வந்தாள்.

கடைசியில் அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. அந்தக் குழந்தைக்கு லட்சுமணன் என்று பெயர் வைத்து ரொம்பவும் செல்வமாக வளர்த்து வந்தார்கள். கீரிப்பிள்ளையும் அந்தப் பையனுடன் கொஞ்சிக் கொஞ்சி விளையாடும்.

ராமனுக்கு அந்த ஊரில் கிராமக் கணக்குப் பிள்ளை வேலை. அதனால் அவன் வீட்டிலேயே இருப்பதில்லை. வயல்களை அளப்பதற்கும் வாயிதாப்பணம் வாங்குவதற்கும் போய்விடுவான்.

ராமி மட்டுந்தான் வீட்டில் இருப்பாள். காலைவேளையில் ஆற்றுக் குக் குளிக்கப் போகும்போது மட்டும் குழந்தையைத் தொட்டி லில் போட்டுவிட்டு, கீரிப்பிள்ளையை அதற்குக் காவலாய் வைத்துவிட்டுப் போவாள்.

அப்படித்தான் ஒரு நாள் வழக்கம்போல் ராமன் வயலுக் குப் போய்விட்டான். ராமி ஆற்றுக்குப் போய்விட்டாள். கீரிப் பிள்ளை குழந்தைக்குக் காவலாக உட்கார்ந்திருந்தது. அப்போது தொட்டில் சங்கிலி வழியாக ஒரு நிஜ நாகப் பாம்பு மேலே யிருந்து சரசரவென்று கீழே இறங்கி வந்தது. அதைப் பார்த்தது கீரி. அவ் வளவுதான்! சிங்கம் போல் பாய்ந்தது; தொட்டிலின் மேல் தாவிற்று. "டேய்! திருட்டுப் பயலே! எங் கேடா வந்தே! உன்னை என்ன பண்ணுகிறேன் பார்!" என்று அந்த நாகப் பாம்பின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டது.



பாம்பும் தன் வாயால் அதைக் கடித்தது. இரண்டும் கட்டிப் புரண்டுகொண்டே கீழே தொப்பென்று விழுந்தன. கடைசி யில் கீரிப்பிள்ளை பாம்பின் தலையைப் பிடித்துக் கடிக்கப் போகும் சமயம், "ஐயோ! விட்டுவிடு!" என்று அது மூச்சுத் திணறிக்கொண்டே சொல்லிற்று.

கீரிப்பிள்ளை, "எதற்காக உன்னை விடுவது?" என்றது.

பாம்பு, "என்னை விட்டால் ஒரு சமாசாரம் சொல் கிறேன்" என்றதும் கீரிப்பிள்ளை பிடியைத் தளரவிட்டது.

அப்போது பாம்பு சொல்லும்: "எதற்காக என்னைக் கொல்லப்போகிறாய்? அதனால் உனக்குத்தான் ஆபத்து."

"அதெப்படி?" என்று கீரி கேட்க, பாம்பு சொல்லும்: "என்னைக் கடித்துக் கொன்றுவிட்டு நீ தெரு வாசலில் போய் நிற்பாய். உன் வாயெல்லாம் ஒரே ரத்தமாயிருக்கும். அப்போது ஆற்றுக்குப் போன உன் எஜமானி வருவாள். உன் வாயில் உள்ள ரத்தத்தைப் பார்த்ததும் நீ குழந்தையைத்தான் கடித்து விட்டாய் என்று எண்ணிக்கொண்டு குடத்தை உன் தலையில் போட்டு உன்னைக் கொன்றுவிடுவாள்."



அதைக் கேட்ட கீரி, "உனக்கு எப்படி அது தெரியும்?" என்று கேட்டது.

பாம்பு: எங்க ஜாதியிலே ஆதிசேஷன்னு ஒருத்தர் இருந்தார். அவருடைய நேரான வம்சத்திலே பிறந்தவாளுக்கு எல்லாம் ஜோஸ்யம் வரும். அதனுல் தான் சொன்னேன்.

கீரி: என்ன, என்னுடைய எஜமானி அவ்வளவு கெட்டவளா? என்னை எத்தனை வருஷமாகத் தெரியும்!

பாம்பு: அட, அசடே! உனக்கு மனுஷாளைப்பற்றித் தெரிந்தது அவ்வளவுதான்.

கீரி: அப்போது என்ன செய்வது?

பாம்பு: நானுயிருந்தால் இந்த வீட்டை விட்டு ஓடிப் போவேன். என்றைக்கு இருந்தாலும் உன்னை ஒரு நாள் கொல்லத்தான் போகிறுர்கள்.

பாம்பு எதற்காக இப்படிச் சொல்லிற்று என்றுல் மெல்லக் கீரியை விரட்டிவிட்டால் தான் குழந்தையைக் கடித்துவிடலாம் என்பதனுல்தான். ஆனுல் கீரியா ஏமாறும்? அது சொல்லிற்று: "அப்படியானுல் நீயும் என்கூட வா. போய்விடுவோம்."

இப்படி இரண்டுமாகப் பேசிக்கொண் டிருக்கையில் குழந்தை விழித்துக்கொண்டு அழுதது. கீரிப்பிள்ளை ஓடிப் போய்த் தொட்டிலை ஆட்டிற்று. "தாலேலோ" என்று பாடிற்று.

அப்போது வாசல்பக்கமிருந்து ராமி வரும் சத்தம் கேட்டது. இதுதான் சமயமென்று நாகப் பாம்பு மெதுவாக நழுவி விட்டது.

உள்ளே வந்த ராமி கீரிப்பிள்ளை குழந்தைக்குப் பாட்டுப் பாடுவதைக் கண்டு, "உன்னைப்போல் சமர்த்து கிடையாது" என்று சொல்லி முதுகில் தட்டிக் கொடுத்தாள்.

குட்டிக் கதைகள்

ராமசர்மா

1. தங்கத்துக்குப் பலி

ஒரு சமயம் ஒரு கப்பல் கடல் நடுவே வந்துகொண் டிருக்கையில் தீப் பிடித்துக்கொண்டு விட்டது. கப்பல் மாலுமிகளும் சிப்பந்திகளும் தீயணைக்க அரும்பாடு பட்டும் முடியவில்லை. தொலை தூரத்தில் ஒரு கப்பலின் பாய்மரம் தெரிந்தது. உடனே இவர்கள் அபாயக் கொடியை உயர்த்தினர். தொலைதூரத்தில் சென்ற கப்பல் சமீபத்தில் வந்து, ஆபத்தில் உள்ளவர்களைக் காப்பாற்ற முன் வந்தது. எரியும் கப்பலுக்குச் சமீபமாகப் பல படகுகள் நிறுத்தப்பட்டன. கப்பலின் தளத்திலிருந்து பிரயாணிகளும் சிப்பந்திகளும் கயிறுகள் மூலம் படகுகளில் குதித்தனர். அப்படிக் குதித்தவர்களில் மாலுமி ஒருவன் இன்னொரு மாலுமி சேர்த்து வைத்திருந்த தங்கக்கட்டிகளின்மேல் கண்ணுயிருந்தான். அவன் அந்தச் சிப்பந்தியின் அறைக்குள் புகுந்து, அங்கு அவன் மறைத்து வைத்திருந்த தங்கத்தை எடுத்துத் தன்னுடைய இடையைச் சுற்றியிருந்த தோல் பையில் பத்திரப்படுத்திக்கொண்டான். பிறகு கயிற்றின் வழியே கீழே நின்ற படகை நோக்கிக் குதித்தான். அவனைப் பிடித்த துரதிருஷ்டம் அவன் குதிக்கும் சமயம் படகு அலையினுல் சற்று நகர்ந்துவிட்டது. பாவம்! மாலுமி தொப்பென்று தண்ணீரில் விழுந்தான். அவனுக்கு நன்ருக நீந்தத் தெரியும். ஆனுலும் அவன் இடையைச் சுற்றிக் கட்டியிருந்த தங்கத்தின் பளு அவனைத் தண்ணீருக்குள் இழுத்தது. எவ்வளவு முயன்றும் அவனுல் வெளியே வர முடியவில்லை. தங்கத்தின் மேல் இருந்த ஆசைக்காக உயிரைப் பலி கொடுத்தான்!

—இங்கிலாந்துக் கதை.

2. காணுமற்போன மரகதம்

ஒரு துருக்கிய வர்த்தகன் ஒரு சமயம் இருநூறு மோகராக்கள் அடங்கிய பணப்பையை இழந்துவிட்டான். உடனே அதைக் கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு அதில் உள்ளதில் பாதியைப் பரிசாகக் கொடுப்பதாக நகரம் முழுவதும் பறைசாற்றச் செய்தான்.

அந்தப் பையைக் கண்டெடுத்தவன் ஒரு போர் வீரன். அவன் வர்த்தகன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து அவனிடம் போய் நிபந்தனைப்படி பாதிப் பணத்தைக் கொடுப்பதானுல் பையைக் கொடுப்பதாகச் சொன்னுன். பணப்பை கிடைத்ததும் வர்த்தகனுக்குப் பேராசை மேலிட்டது. அதனுல் அந்தப் போர்வீரனை ஏமாற்ற நினைத்து அவன், "அந்தப் பையில் இருநூறு மொகராக்களும் ஒரு விலை உயர்ந்த மரகதக் கல்லும் வைத்திருந்தேன். அவைகளை அப்படியே திருப்பிக் கொடுத்தால் நிபந்தனைப்படி பாதிப் பணம் பரிசு தருகிறேன்" என்ருன்.

வர்த்தகனுடைய தந்திரத்தை உணர்ந்துகொண்ட போர்வீரன் பணப்பையைத் திருப்பிக்கொடுக்க முடியாது என்ருன். உடனே வழக்கு நீதிபதியின் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. நீதிபதி இருவரையும் விசாரித்தபின் வர்த்தகனை நோக்கி அவன் பையில் வைத்திருந்ததாகச் சொல்லும் மரகதத்தை வர்ணிக்கும்படி கேட்டார். வர்த்தகன் முன்னுக்குப் பின் முரணுக ஏதோ உளறினுன். அவனுடைய பதிலிலிருந்து உண்மையை அறிந்துகொண்ட நீதிபதி பின்வருமாறு தீர்ப்பு அளித்தார்:—

"வர்த்தகரே! உமது பையில் இருநூறு மோகராக்களுடன் ஒரு மரகதக் கல்லும் வைத்திருந்ததாகச் சொல்கிறீர். ஆனுல் நம்முடைய போர்வீரர் கண்டெடுத்த பையில் மோகராக்கள் மட்டுந்தான் இருக்கின்றன. ஆகையினுல் இது உம்முடைய பை இல்லை. ஐயா! போர்வீரரே! இந்தப் பையை நாற்பது நாட்கள் மிக ஜாக்கிரதையாய் வைத்திரும். அதற்குள் அத

னுடைய சொந்தக்காரர் வந்து பெற்றுக்கொள்ள வில்லையானால் அதில் உள்ள பணத்தை உமது இஷ்டம் போல் உபயோகித்துக் கொள்ள அனுமதி கொடுக்கிறேன்.''

—துருக்கிக் கதை.

3. எமலோகத்தில் வைத்தியர்

ஒரு சமயம் ஒரு திருடன், ஒரு போக்கிரி, ஒரு வைத்தியன் ஆகிய மூவரையும் எமதூதர்கள் எமலோகத்துக்கு இழுத்துச் சென்றனர். எமதேவன் முதலில் திருடனை நோக்கி, "பூலோகத்தில் நீ என்ன செய்தாய்?" என்று கேட்டான். திருடன், "பகலில் வெளியில் துணிகளை உலரவைப்பார்கள். இரவில் அவைகளை எடுத்துக்கொள்ளத் தவறிவிட்டால் அந்தத் துணிகளை நான் எடுத்துக்கொள்வேன்" என்று பதில் சொன்னான்.

பிறகு எமதர்மன் போக்கிரியை அழைத்து விசாரித்தான். போக்கிரி, "நள்ளிரவில் உறங்குவதற்கு இடம் இல்லாமல் அலையும் ஜனங்களை நான் அழைத்து என் வீட்டில் படுக்க இடம் கொடுத்தேன்" என்றான்.

அவர்கள் செய்த குற்றங்களைக் கேட்டதும் எமதேவன், "நீங்கள் செய்த காரியம் மிகவும் உயர்வானது. ஆகையினால் நீங்கள் இன்னும் சில வருஷங்கள் பூமியில் போய்ச் சௌக்கியமாய் இருங்கள்'' என்று தீர்ப்பளித்தான்.

அடுத்தபடியாக வைத்தியரின் முறை வந்தது. "நீ என்ன செய்தாய்?" என்று கேட்டதும் வைத்தியன் பின்வருமாறு பதில் சொன்னான்: "நோயால் கஷ்டப்படுகிறவர்கள் எவரையாவது கண்டால் நான் அவர்களுக்கு உதவி செய்து அவர்கள் நோயைச் சொஸ்தப்படுத்தினேன்.' அதைக் கேட்டதும் எமதர்மன் ஆத்திரத்துடன் மேஜையை ஓங்கிக் குத்திவிட்டு, "ஓஹோ! சமீபத்தில் ஏன் ஒரு ஜீவனும் இங்கு வரவில்லையென்று இப்போதுதான் தெரிகிறது. நீதான் அவர்களையெல்லாம் நிறுத்தி வைத்திருக்கிறாய்" என்று சொல்லி, தூதர்களை அழைத்து வைத்தியனைப் பதினேழாவது நரகக்குழியில் தள்ளும்படி உத்தரவிட்டான்.

அவ்விதமே தள்ளப்பட்ட வைத்தியன் அங்குள்ள வேதனை தாங்காமல் அலறினன். அப்போது அவனுக்குப் பக்கத்து நரகத்தில் இன்னொரு ஜீவன் வேதனையுடன் அலறுவது கேட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்ட வைத்தியன் தன்னை விடக் கொடிய தண்டனையை அநுபவிப்பவன் யார் என்று அறிய ஆவல் கொண்டு, "சகோதரா, நீ என்ன குற்றம் செய்து இந்தத் தண்டனையை அடைந்தாய்?" என்று கேட்டான். அப்போது கீழ்க்கண்ட பதில் வந்தது: "அப்பனே! பூலோகத்தில் நான் ஒரு வாத்தியாராக இருந்தேன். மக்களுக்குப் பொய்யான அறிவைப் புகட்டியதாக என்மேல் குற்றம் சாட்டி எமதர்மன் என்னை இங்கே தள்ளிவிட்டான்."

—சீனக் கதை.

பெருக்கல் விநோதம்!

வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.

142857 —இதோ பக்கத்தில் கொடுத்திருக்கிறதே 6 ஸ்தானங்கள் அடங்கிய ஓர் எண், அது ஒரு விசித்திர மான இலக்கம். அதில் இரண்டு விதமான விநோதங்கள் அடங்கியிருக்கின்றன.

அவைகளுள் ஒன்று இது. இந்த எண்ணை 2, 3, 4,5, 6 என்னும் ஐந்து எண்களுள் எதனால் பெருக்கினாலும் வரும் விடையில் 1, 4, 2, 8, 5, 7 என்னும் ஆறு எண்களே வரும். வேறு எண்கள் அதாவது 3, 6, 9, 0 என்பன வரா. முன் குறிப்பிட்ட ஆறு எண்களே மாற்றியமைக்கப்பட்டு வரும்.

இதை விடப் பெரிய விநோதம் அடியிற்கண்டது: 142857 என்னும் எண்ணை 2, 3, 4, 5, 6 என்னும் எண்களால் பெருக்கி வரும் விடையைப் பெருக்காமலேயே கண்டுபிடித்து விடலாம். இத்தொகையில் உள்ள கடைசி இலக்கமாகிய '7' என்பதை மட்டும் 2, 3, 4, 5, 6 என்ற எண்களினால் பெருக்கினால் போதும். அப்படிப் பெருக்கி வரும் எண்ணின் கடைசி இலக்கத்தில் முடியும்படி மேற்குறித்த தொகையை மாற்றி அமைக்கவேண்டும். அப்படி மாற்றி அமைக்கையில், இலக்கங்களின் முறையை மட்டும் கலைக்காமல் எழுதவேண்டும். அவ்வளவுதான்!

விளக்கம்:

$142857 \times 2 = 285714 \quad [7 \times 2 = 14]$
$142857 \times 3 = 428571 \quad [7 \times 3 = 21]$
$142857 \times 4 = 571428 \quad [7 \times 4 = 28]$
$142847 \times 5 = 714285 \quad [7 \times 5 = 35]$
$142857 \times 6 = 857142 \quad [7 \times 6 = 42]$

பர்ஸாத்

கே. சந்திரமௌலி (C. 7.)

(பர்ஸாத் = மழை)

1

நேரம்: காலை 10-30 மணி.
இடம்: வீதி; பள்ளிக்கருகில்.
பாத்திரங்கள்: ரங்கன், சுந்தர்.

ரங்கன்: டேய் சுந்தர்! இன்னிக்கு 'ஹோம் ஒர்க்' செய்துட்டாயா?

சுந்தர்: இல்லையடா! இன்னைக்கு மட்டம் போட்டுடலாம்னு நினைச்சேண்டா. இன்னைக்கு நம்ப கணக்கு வாத்தியார் மிஸ்டர் 'கொத்தவரங்காய்' என்ன செய்யறதோ தெரியலை.

ரங்: இதோ பார், சுந்தர்! நானும் 'ஹோம் ஒர்க்' செய்யலை. நீயும் செய்யலை. பள்ளிக்கூடம் போனுல் உதை விழும். அதனுலே எனக்கு ஒரு யோசனை தோன்றது.

சுந்: உன் யோசனையை ஒடைப்பிலே போடடா. யாரையாவது பார்த்துக் காப்பியடிச்சுப் போடலாம் என்பாய்.

ரங்: சீ, முட்டாள்! உன் மூளையைச் சூளையில் வை, போ. நாம் ரெண்டு பேரும் கணக்கோ போடலே. பள்ளிக்கூடம் போனுக்கே சூடா தலைக்கு நாலு கெடச்சுடும். அதனுலே நான் ஒண்ணு சொல்றேன் கேளுடா. ராஜா டாக்கீஸிலே.......

சுந்: ஆமாம்டா. மறந்தே போச்சு. ராஜாவில் 'பர்ஸாத்' ஓடறதாமே. படம் 'ஏ ஒன்'. ஆனு வைடமின் 'ப'தான் 'டைட்டா' இருக்கு. எங்கிட்டே இதோ பார், 48 தம்பிடியைத் தவிர வேறு செப்பாலடிச்ச காசு கூடக் கிடையாது..

ரங்: பரவாயில்லைடா. எங்கிட்டே ஒரு 14 அணுக்காசு இருக்கு. ரெண்டு பேரும் 'அட்ஜஸ்ட்' பண்ணிப்போம். 'குட்', கிளம்பலாமா? இன்னும் என்னடா யோசனை?

சுந்: ஆமா, பள்ளிக்கூடம் $4\frac{1}{2}$ மணிக்கு விடரு. சினிமா ஆறு மணிக்கு விடரு. அத்தனை நேரம் எங்கடா போயிருந்தேன்னு என்ன தம்பி சொல்றது? வீட்டுக்கு வந்தால் அப்பா கை நம்ப முதுகிலே 'ஆதி தாளம்', 'ரூபக தாளம்' எல்லாம் போட்டு ஒரே ஏக தாளமா விழும்!

ரங்: அப்புறம் முகாரி ராகத்தில் பாடவேண்டியதுதான் என்கிருயா? போடா பயந்தாங்

கொள்ளி! நீ வராட்டா போ. நான் போய்க்கிறேன்.

சுந்: கோவிக்காதேடா ரங்கா! நானும் வர்றேன்.

[இருவரும் படம் பார்க்கப் போகின்றனர். மாலை ஆறு மணிக்குப் படம் முடிகிறது. வெளியில் மழை 'சோ' என்று கொட்டுகிறது.]

ரங்: சுந்தர்! மணி ஆறு. மழை விடலையே; எப்படிடா வீட்டுக்குப் போறது?

சுந்: நான் அப்பவே சொன்னேனே, கேட்டியா? வீட்டுக்குப் போனதும் முதுகிலே 'பர்ஸாத்' பொழியறதுபோல உதை விழப் போறது.

ரங்: சுந்தர், ஒரு அருமையான யோசனை! பயப்படாதேடா. அடா அடா அடா! வருண பகவான் கருணையே கருணை! சரி, வா..ஒரே ஓட்டம் வீட்டுக்கு. எங்கே, ஒன்..டு..த்ரீ....

[நனைந்துகொண்டே ஓடுகிறார்கள்.]

2

[தகப்பனார் சேஷாத்திரி குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருக்கிறார். அவர் முகம் கோபத்தினால் பார்க்கப் பயங்கரமாக இருக்கிறது.]

சுந்: ரங்கு! அப்பா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறதுடா. பார்த்தியா....

[ரங்கன் தகப்பனாரின் எதிரில் போகிறான்]

சேஷா: ஆ! இரண்டு பேரும் எங்கேடா போயிருந்தீர்கள், மழையில் நனைஞ்சிண்டு? பள்ளிக்கூடம் இப்பதான் விட்டாளா....?

ரங்: இல்லேப்பா..வந்து..வந்து..பர்ஸாத்..த்..து..

சேஷா: என்ன, ரெண்டு பேரும் பள்ளிக்கூடம் போகாமல் ஹிந்தி சினிமாவுக்கா போயிட்டு வருகிறீர்கள்? மடையன்களா! என்ன தைரியம்டா உங்களுக்கு! மங்களம்! ஏய், மங்களம்! உன் பிள்ளைகளின் சமத்தைப் பார்த்தியா? கொண்டுவா பிரம்பை!

[சுளீர் சுளீர் என்று ரங்கனுக்கு இரண்டு விழுகிறது. சுந்தரம் நடுங்குகிறான்.]

சேஷா: டேய் சுந்தரம், எங்கே ஒளியப் பாக்கறே? வாடா இங்கே..அவனை அழைச்சுண்டு சினிமாவுக்கா போயிட்டு வரே..?

ரங்: (நடுங்கிக்கொண்டே) இல்லேப்பா. நாங்க 'பர்ஸாத்' சினிமாவுக்குப் போகலேப்பா! பள்ளிக்கூடந்தான் போயிருந்தோம். நாலரை மணிக்கு மழை பிடிச்சுண்டுடுத்து. அதனாலே தான் நேரமாயிட்டுது.

சேஷா: என்னடா பொய் சொல்றே?

ரங்: அதுவாப்பா! ஹிந்தி வாத்தியார் இன்னிக்கு 'பர்ஸாத்' என்றால் 'மழை' என்று சொல்லிக் கொடுத்தார், அப்பா அதைத் தான் நாங்க சொல்லி முடிக்கிறதுக்குள்ளே நீங்க போட்டு அடிச்சுட்டேளே!

சேஷா: ஏண்டா, இதை முன்னாலேயே சொல்லியிருக்கப்படாது. உதை வாங்காமலிருக்கலாமே. சரி சரி, உள்ளே போய் டிபன் சாப்பிடுங்கோ. நானே 'பர்ஸாத்' சினிமாவுக்கே அழைச்சுண்டு பே றேன்

சுந்: பர்ஸாத்துமே.....தின்தின தின்....தக்......தினதின தின்.....டேய் ரங்கா, எப்படிடா! வருண பகவான் அருளால் - அடேடே! மறந்துட்டேனே - பர்ஸாத்தின் அருளால்!

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

[திரை]

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(K) 217. கைலாசம், தைலாம்பாள், வைத்தியநாதன், A. S., சென்னை - 4. 218. கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 4. 219. கல்பகம், S., சென்னை-17. 220. கலாவதி, R., சென்னை-4. 221. கிருஷ்ணன், சாரதா, A. V., வேலூர். 222. கார்த்திகேயன், S. D., திருநெல்வேலி. 223. கிருஷ்ணம்மாள், K., ஐயநேரி. 224. கிருஷ்ணன், N., கல்லல். 225. கிருஷ்ணன், C. V., சென்னை-17. 226. கோதண்டராமன், M., விருகம்பாக்கம். 227. குமரேசன், R., மதுரை. 228. கண்ணன், K., கும்பகோணம். 229. கமலம், R., பறங்கிப்பேட்டை. 230. கனகாம்பிகை, K., மௌண்ட் லூவிஞே. 232. கருப்பையா, M., ஆண்டிப்பட்டி. 233. காவேரி, G., திருச்சிராப்பள்ளி. 234. கிருஷ்ணமூர்த்தி, V., சென்னை-1. 235. கிருஷ்ணமூர்த்தி, சுப்பிரமணியன், P. S., புது டில்லி. 236 கேசவன், R., கொழும்பு-11. 237. கார்த்திகேயன், S., சென்னை-14. 238. கோமதி, S. P., சிறுவயல். 239. குப்புசாமி, V., சேலம். 240. குப்புசாமி, R., ஈரோடு. 241. கிருஷ்ணமூர்த்தி, R., சென்னை-5.

(L) 71. லீலா, மாலினி, R., ஆத்தூர். 72. லக்ஷ்மிநரசிம்மன், P., பீளமேடு. 73. லக்ஷ்மிநாராயணன், S., திருவிடைமருதூர். 74. லலிதா, K. S., ஜாம்ஷெட்பூர். 75. லீலா, P. M., பாளையங்கோட்டை. 76. லக்ஷ்மணராவ், R., சென்னை-4. 77. லக்ஷ்மி, C. R., புனா-1. 78. லக்ஷ்மி, லலிதா, N. A., சென்னை-2. 79. லக்ஷ்மிபாய், K., தென்பாரை. 80. லலிதா, K., சென்னை-4. 81. லலிதா, R., சென்னை-4. 82. லலிதா, S., சென்னை-1. 83. லலிதா T. V., புது டில்லி. 84. லீலா, மாலா, சீதா, ரமணி, ஓசூர். 85. லக்ஷ்மி, S., பம்பாய்-19. 86. லக்ஷ்மி, C. P., ஜாம்ஷெட்பூர். 87. லக்ஷ்மணன், N., வேலூர். 88. லக்ஷ்மணன், P. R., கல்கத்தா-29. 90. லக்ஷ்மி, M. S., ஆத்தூர். 91. லக்ஷ்மணன், அரவங்காடு. 92. லக்ஷ்மணன், S. P., சங்ககிரி. 93. லலிதாமணி, S., தூத்துக்குடி. 94. லக்ஷ்மி, பத்மாவதி, V., கல்கத்தா-26. 95. லீலாவதி, A., ஈரோடு. 96.

இங்கே கத்தரியுங்கள.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி........................

(தேதி, மாதம், வருஷம்)

அக்டோபர் '51 கூபன் கெ:

லக்ஷ்மி, K., புது டில்லி. 97. லலிதா, ஜயா, T. N., புது டில்லி. 98. லக்ஷ்மி, K., கொடுமுடி. 99. லக்ஷ்மி, விசுவநாதன், D., புது டில்லி. 100. லக்ஷ்மணன், R., தில்லையாடி. 101. லலிதா, R., கல்கத்தா. 102. லக்ஷ்மிநாராயணன், M. V., லால்குடி. 103. லக்ஷ்மணன், S., மதுரை. 104. லலிதா, K. V., காரத் தொழுவு. 105. லலிதா பாய், T. S., திருவண்ணாமலை. 106. லலிதா, விஜயம், S., கோயம் புத்தூர். 107. லோகநாதன், K. R., தைப்பிங், மலாயா. 108. லக்ஷ்மி நாராயணன். G., தஞ்சா வூர். 109. லக்ஷ்மணன், தேவகி, C. R., சென்னை-17. 110. லக்ஷ்மி, H., செங்கோட்டை. 111. லீலா வதி, ரத்தினம், அம்புஜம் S., வில்லி வாக்கம். 112. லக்ஷ்மி R., விழுப்

★★★★★★★★★★★★★★★★★

அடுத்த இதழ்

கண்ணன்
தீபாவளி மலர்

விதம் விதமான வர்ணப் படங்கள் அழகழகான கதைகள், அற்புதமான வேடிக்கைகள் நிறைந்த அருமையான மலர்.

தீபாவளி அன்றே கிடைக்கும்!

★★★★★★★★★★★★★★★★

புரம். 113. லக்ஷ்மி, N., கல்கத்தா-29. 114. லூருதுசாமி, J., சென்னை-11. 115. லோகநாயகி, T., சென்னை-2. 116. லக்ஷ்மணன், G. V., டால்மியாபுரம்.

(M) 101. மருதாசலம், R., காட்டூர், கோவை. 102. முகுந்தன், A., டில்லி. 103. மைதிலி, லக்ஷ்மி, S., கல்கத்தா-26. 104. மீனாக்ஷி, சுப்பிரமணியன், M., பெங்களூர்-3. 105. மைக்கேல் ராய், கெர்ட்ரூடு மேரிவனஜா, கடு கன்னவா. 106. மனோகரன், M., உரும்பிராய். 107. மகாதேவன், ஆண்டிப்பட்டி. 108. மகாதேவன், S., கொழும்பு. 109. மகாதேவன், P., தெல்லிப்பிழை, சிலோன். 110. மீரா சாகிப், ஏர்வாடி. 111. மீரா, பார்வதி, நிர்மலா, கிரிதர், K., சென்னை-4. 112. முருகேசன், S., திசையின்விளை. 113. முருகேசன், A., திருமங்கலம். 114. முருகேசன், M., சென்னை-1. 115. முத்துசாமி, T. R., சென்னை-4. 116. முத்துராமலிங்கம், K., காரைநகர். 117. முத்து, S., சிலோன். 118. முத்து, M., ஆலத்துடையாம்பட்டி. 119. மலர், S. K., மட்டக்களப்பு. 120. மாலதி, R., கும்பகோணம். 121. மணி, S., திருச்சிராப்பள்ளி. 122. மணியன், V. V. S., கெட்டி, நீலகிரி. 123. மணி, P. S., சென்னை-14. 124. மீனாக்ஷி அம்மாள், M., நாகர்கோயில். 125. முனிகிருஷ்ணன், சகுந்தலா, கண்ணன், S. M., வேலூர். 126. மாரியப்பன், K., ஆண்டிப்பட்டி. 127. மாரிமுத்து, திருச்சிராப்பள்ளி. 128. மாரிமுத்து, R., திருப்பத்தூர்.

(மீதி அடுத்த இதழில்)

சின்னராஜா

வாசகன்

கடைசித் தடை

குதிரை போய்க்கொண்டிருந்தது. அதைக் காட்டிலும் சின்னராஜாவின் மனசு வெகு வேகமாக ஓடியது. தன் தகப்பனாரிடம் போய் விஷயத்தைச் சொல்லும் வரையில் அவனுக்கு வேறு எந்த விதமான நினைவுமே வராதென்று தோன்றியது.

குதிரை சாமானியமானது அல்ல. மிகவும் வேகமாகப் போகும் குதிரைதான். சின்னராஜாவுக்கே அது நல்ல வேகமாகப் போகிறதென்று தெரிந்தது. ஆனாலும் அவனுக்கு இருந்த மனோ வேகத்துக்கு அந்த வேகம் போதவில்லை.

தஞ்சாவூருக்கு நேரே கொண்டுபோய் விடும் சாலை அது. நல்ல வேளையாக, சந்திரன் மேக மூட்டத்தினின்றும் விலகி ஒளி வீசினான். சின்னராஜாவின் மனசில்கூட இப்போது தெளிவு உண்டாயிற்று. நிச்சயமாகத் தகப்பனாரைப் பார்த்து ஆவூருக்கு அழைத்து வந்துவிடலாம் என்ற நம்பிக்கை உதயமாயிற்று.

குதிரை வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. 'அப்பா என்னைக் கண்டவுடன் திடுக்

கிட்டுப்போவார். இந்த நள்ளிரவில் இவ்வளவு துணிச்சலுடன் நாம் காரியம் செய்வோம் என்று அவர் சிறிதும் எதிர்பார்த்திருக்க மாட்டார். சோழ மகாராஜாவைக்கூட நாம் பார்க்கலாம். அவர்கூட நம்முடைய துணிவைக் கண்டு அதிசயம் அடைவார்!'—அவனுடைய ஞாபகம் எல்லாம் தஞ்சாவூரில்தான் இருந்தது.

கிழக்கு வெளுத்துக்கொண்டு வந்தது. மறுநாள் காலையில் வெயில் ஏறுவதற்கு முன்பாவது தகப்பனுரை அழைத்துக் கொண்டு ஆவூருக்குப் போனுல் தான், தான் நினைத்த காரியம் கைகூடும் என்று அவன் உணர்வான். குதிரையின் லகானைச் சிறிது சுண்டிவிட்டான். அது வெறி பிடித்ததுபோலப் பறக்க ஆரம்பித்தது. சின்னராஜா குதிரையின்மேல் அப்படியே முன்னுல் சாய்ந்து படுத்துக் கொண்டான்.

மங்கின ஒளியில் தூரத்தில் சில உயர்ந்த மாளிகைகள் சின்னராஜாவின் கண்ணுக்குப் புலப்பட்டன. அதுதான் தஞ்சாவூராக இருக்கும் என்று ஊகித்தான். ஆனுல் நிச்சயம் ஏற்படவில்லை. அவன் அந்தப் பக்கத்துக்கு இதுவரையில் வந்தவன் அல்லவே! அந்த நகரத்திலிருந்து ஜனங்கள் சாலை வழியே நடந்து வந்து கொண்டிருந்தார்கள். 'அட! அதற்குள் எழுந்து வருகிறுர்களே! என்ன சுறுசுறுப்பான ஜனங்கள்!' என்று சின்னராஜா வியந்தான். அவன் எப்போதுமே நேரம் கழித்து எழுந்திருப்பவன். 'விடியற் காலம் எழுந்திருந்து பாடங்களைப் படித்தால் தெளிவாக விளங்கும்' என்று வாத்தியார் கூறியிருக்கிறுர். அதெல்லாம் தான் அவன் காதில் ஏறவில்லையே!

இப்போது வாத்தியார் வார்த்தை அவன் நினைவுக்கு வந்தது. 'எத்தனையோ விதங்களில் நாம் மோசம் போய்விட்டோம். அவைகளில் இதுவும் ஒன்று. அப்பொழுது வாத்தியார் சொன்னதெல்லாம் செவிடன் காதில் ஊதின சங்கு போல் ஆயிற்று. இப்போது தான் அவர் சொன்ன வார்த்தைகளின் மகிமை நமக்குத் தெரிய வருகிறது. இந்த ஜனங்கள் இவ்வளவு விடியற் காலையிலே எழுந்து வேலைக்குப் போகிறுர்கள். நாமோ சூரியன் சுள்ளென்று உறைக்கும் வரைக்கும் படுக்கையில் புரண்டு கொண்டிருப்போம்....'

அவன் சிந்தனை சிறிது தடைப்பட்டது. எதிரே ஒரு வண்டி வந்தது. குதிரை சிறிது மெதுவாகப் போயிற்று. சின்னராஜா அருகில் போய்க்கொண்டிருந்த ஒரு மனிதனைப் பார்த்து, "அதுதானே தஞ்சாவூர்?" என்று கேட்டான்.

"ஆம்" என்று அவன் சொல்லிக் குதிரையைப் பார்த்தான். அத்தனை விடியற்காலத்தில் சின்னஞ் சிறு பையன் ஒருவன் அவ்வளவு வேகமாகக் குதிரைச் சவாரி செய்வதைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டுப்போனுன். என்னவோ கேட்க வாயெடுத்தான். அதற்

குள் குதிரை அவனைக் கடந்து போய்விட்டது.

தஞ்சாவூருக்குள் குதிரை நுழைந்தது. பலபலவென்று விடிந்து விட்டது. "மகாராஜாவின் அரண்மனை எங்கே இருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே போனான் சின்னராஜா. தஞ்சாவூர் எத்தனை பெரிய ஊர்! அவன் அந்த மாதிரியான பெரிய ஊரைப் பார்த்ததே இல்லை. அரண்மனையை நெருங்கினான். அகழியைத் தாண்டிப் போகவேண்டும். நினைத்தவர்களெல்லாம் நினைத்த நேரத்தில் அரண்மனைக்குள் போக முடியுமா? "யார் நீ? எங்கே வந்தாய்? யாரைப் பார்க்க வேண்டும்?" என்ற கேள்விகளை வெளியில் உள்ள காவற்காரர்கள் கேட்பார்களே! இந்த விஷயம் சின்னராஜாவுக்குத் தெரியாது. நேரே தன் தகப்பனாரிடம் போய்ச் சேர்ந்துவிடலாம் என்று நினைத்தான்.

அரண்மனையின் மதில் வாசலுக்கு வந்துவிட்டான். வாசலில் இருந்த சேவகன், "யார் நீ?" என்று கேட்டான்.

"நான்தான் சின்னராஜா!"

"சின்னராஜாவாவது! பெரிய ராஜாவாவது! சின்னப் பையன் நீ. இந்தக் குதிரையில் தட்டுக்கெட்டு ஏறி வந்துவிட்டாய் போலிருக்கிறது. போ. வீட்டுக்குப் போ" என்றான் காவலாளி.

"ஐயையோ! நான் இரவோடு இரவாக நெடுந்தூரம் கடந்து வந்திருக்கிறேன்; என்னுடைய தகப்பனார் ஆவூர் மகாராஜா, மார்த்தாண்டவர்ம மகாராஜாவைப் பார்க்க வேண்டும். மிகவும் அவசரமான காரியம்" என்று சின்னராஜா படபடப்போடு பேசினான்.

"என்ன தம்பி, கதை அளக்கிறாய்! பெரியவர்கள் பேரைச்

சொல்வதில் உனக்குக் கூச்சமும் இல்லை; மரியாதையும் தெரியவில்லையே. யாராவது உன் பேச்சைக் கேட்டால் சிரிப்பார்கள். ராஜா பிள்ளை இப்படித் தனியாகத்தான் வருவாரயோ?''

"ஐயோ, உனக்கு விஷயம் தெரியாமல் பேசுகிறாய். அங்கே ஊரைப் பகைவர்கள் முற்றுகை யிட்டிருக்கிறார்கள். அதை ஆலூர் ராஜாவுக்குச் சொல்லவேண்டும்.''

"ஓஹோ! அப்படியா? முற்றுகையிட்ட ஊரிலிருந்து நீ எப்படித் தம்பி, தப்பி வந்தாய்? பூமியைக் குடைந்து கொண்டு வந்தாயா? அல்லது ஆகாசத்தில் பறந்து வந்தாயா? ஊரில் வேறு யாரும் ஆளே இல்லையாக்கும்! இந்தப் பெரிய மனுஷனை அனுப்பியிருக்கிறார்களோ!''

காவலாளி பரிகாசமாகவே பேசினான். சின்னராஜாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. பல்லைக் கடித்துக்கொண்டான். இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்தும் மலைப் பாம்பு போல இந்த மனிதன் மறிக்கிறானே என்று கவலை கொண்டான்.

"இங்கே பார் அப்பா, நான் ஒருத்தருக்கும் தெரியாமல் அகழியில் நீந்தி வந்தேன். கஷ்டப்பட்டு வந்திருக்கிறேன். எங்கள் அப்பாவைப் பார்க்க வேண்டும்'' என்று கெஞ்சினான்.

"இந்தக் குதிரை எப்படிக் கிடைத்தது? அகழியில் உள்ள முதலையைக் குதிரையாக்கிக் கொண்டுவந்தாயோ?''

"சின்னராஜா!''

காவலாளி பேசிக்கொண்டிருக்கும் இடையிலே சின்ன ராஜாவை யாரோ பேர் சொல்லி அழைத்தார்கள். சின்னராஜா நிமிர்ந்து பார்த்தான். அரண்மனைக் கோட்டையிலிருந்து வந்துகொண்டிருந்த போர்வீரன் ஒருவன் தான் அவனைக் கூப்பிட்டிருக்கிறான். அந்த நேரத்தில் அவனை அங்கே அந்த வீரன் கண்ட போது அவன் பிரமித்துப் போனான். ஓடிவந்து குதிரைக் கருகில் நின்று சின்னராஜாவை இறக்கினான். சின்னராஜாவுக்குப் பேச வாய் வரவில்லை. அழுகை வரும்போல் இருந்தது. வாய் குழறிக்கொண்டே, "அப்பா எங்கே?'' என்று கேட்டான்.

இந்தக் காட்சியை முன்பு சின்னராஜாவைத் தடுத்த காவலாளி பார்த்தான். தான் ஏதோ தப்புச் செய்துவிட்டதாக அவனுக்குத் தெரிந்தது. போர்வீரனைப் பார்த்து, "என்ன அண்ணே, இந்த நேரத்தில் இந்தப் பிள்ளை இங்கே வந்து தொந்தரவு கொடுக்குது?'' என்று கேட்டான்.

"பிள்ளையா! சின்னராஜா என்று சொல். எங்கள் மகாராஜாவின் அருமைப் பிள்ளை.''

"ஆ! அப்படியா! இவர் சொன்னதெல்லாம் நிசந்தானா?'' என்று அவன் வாயைப் பிளந்தான்.

"அப்பாவை உடனே பார்க்க வேண்டும்" என்று சின்ன ராஜா சொன்னான். அந்தப் போர்வீரன் அவனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான். குதிரையோட்டி போனான். ஏதோ அரையுங் குறையுமாக ஆலூர் முற்றுகை விடப்பட்டிருப்பதைச் சொல்லிக்கொண்டே போனான். வீரன் வேகமாக அவனை அழைத்துக்கொண்டு சென்றான்.

சூரியன் உதயமாகும் நேரம். அரண்மனைக்குள் சென்ற வீரன் வேறு ஒருவரிடம் சின்னராஜாவை ஒப்பித்தான். அவர் நேரே அவனை மார்த்தாண்ட மகாராஜா இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார்.

(தொடரும்)

குயிலே, கூவிடு!

கி. சொர்ணவேலு

குயிலே, குயிலே, வா வா.
குஞ்சுக் குயிலே வா வா.

குஞ்சுக் குஞ்சுக் குயிலே நீ
அஞ்சி அஞ்சி ஓடாதே!
கொஞ்சிக் கொஞ்சிக் கூவவே
கெஞ்சிக் கெஞ்சி அழைக்கிறேன்.

குயிலே, குயிலே, வா வா.
குஞ்சுக் குயிலே வா வா.

பஞ்சு போன்ற உன்னிடம்
நெஞ்சில் அன்பு இல்லையா?
கெஞ்சி நானே அழுகிறேன்
கொஞ்சமேனும் கூவிடேன்.

குயிலே, குயிலே, வா வா.
குஞ்சுக் குயிலே வா வா.

கோடைக்கானல்

வி. எஸ். இந்திராணி

க்ஷேமம். ஆனந்தகிரி,
கோடைக்கானல்.

பிரியமுள்ள உமா!

உன் அன்பான கடிதம் கிடைத்தது. பார்க்க மிகவும் சந்தோஷம். "கோடைக்கானலுக்குச் செல்லவே என்னை அடியோடு மறந்து விட்டாயா?" என்று கேட்டிருக்கிறாய். தோழி உன்னை நான் எப்படி மறக்க முடியும்? எப்பொழுதும் உன் நினைவாகவே இருக்கிறேன் நீயும் இவ்விடம் வந்திருந்தால் எனக்கு இன்னும் எவ்வளவோ குஷியாக இருந்திருக்கும்!

இவ்விடத்து இயற்கைக் காட்சிகளை என்னவென்று வர்ணிப்பேன்! எங்கும் கண்ணுக்கு இனிமையான ஒரே பசுமை. அடர்ந்த வாழைத் தோட்டங்களையும் காபித் தோட்டங்களையும் ஆரஞ்சுத் தோட்டங்களையும் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். வானையளாவ உயர்ந்திருக்கும் 'யூகலிப்டஸ்' மரங்கள் வாசனை கமழும் இலைகளை அசைத்து, 'வா வா' என்று அழைக்கும்போது சுவர்க்க பூமிக்கே வந்துவிட்டோமோ என்று தோன்றுகிறது.

என்னுடைய தாத்தா என்னை எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று காட்டுகிறார். ஜில்லென்ற காற்று முகத்தில் உராய்ந்து செல்ல, காலையும் மாலையும் உலவும் போது ரமணீயமாக இருக்கிறது. நம் ஊர்களில் சுமார் ஒன்றிரண்டு மைல் சேர்ந்தாற்

போல் நடந்துவிட்டால், கை கால்கள் வலித்து, வேர்த்துக் கொட்டி, பிரளயமே புரண்டு விட்டமாதிரி ஆகி விடுகிறது. ஆனால் இங்கோ, தினம் எத்தனையோ மைல்கள் நடக்கிறேன். துளிக்கூட சிரமம் தெரியவில்லை. வெயில் கிடையாது; குளிர்ந்த காற்று; குஷியாக நடக்கக் கேட்பானேன்!

இங்கே குளிர்ச்சியை உத்தேசித்துக் கீழ் நாட்டிலிருந்து அநேக ஜனங்கள் வருகின்றனர். ஊட்டி, நீலகிரி, கோடைக்கானல் முதலிய மலைப்பிரதேசங்கள் எப்பொழுதுமே குளிர்ச்சியாக இருக்கும் என்பது உனக்குத் தெரியுமே!

கோடைக்கானல் ரோடு ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து கோடைக்கானல் சுமார் ஐம்பது மைல் உள்ளது. ஸ்டேஷனில் இறங்கி மலைக்குப் பஸ்ஸில் போயாக வேண்டும். இருபதுமைல் வரையில் சமவெளிப் பிரதேசம். பிறகு முப்பது மைல் மலைப்பிரயாணம். வழவழப்பான ரோட்டில் பஸ் வளைந்து வளைந்து ஓடும்போது சுற்றிலுமுள்ள காட்சிகள் அனைத்தும் சுழன்று சுழன்று நம்மோடு பிரயாணம் செய்வது போலிருக்கும்.

இது வெயில் காலந்தானே? இப்பொழுதுகூட இங்கே பச்சைத் தண்ணீரைத் தொட முடியவில்லை. எப்பொழுதும் கம்பளிச் சட்டையுடன் இருக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் குளிர் ஒவ்வொரு மயிர்க்கால்களிலும் ஊடுருவிப் பாய்கிறது.

இவ்வூரில் காகம், கொசு, ஈ, தேள், பாம்பு ஒன்றும் கிடையாது. நம் ஊர்களில் கோடைக்காலம் வந்தால் விசிறியும் கையுமாக அலைவோம். குளிர்காலம் வந்தால் கொசுவுக்குப் பயந்து, கொசு வலைக்

போலீஸ்காரன்: டேய், என்னடா செய்யறே இங்கே? வாடா இப்படி!

திருடன்: (போலீஸ்காரன் என்பதைக் கவனிக்காமல்) இரு அண்ணே! இப்பத்தான் பெட்டியை மூடிட்டுப் படுக்கப் போயிருக்காரு! ஒரு தூக்கமாவது போடவேண்டாம்?

குள் புகுந்து கொள்வோம். இங்கே எக்காலத்திலும் எத் தகைய தொந்தரவும் கிடையாது. இரவு எட்டு மணிக்குக் கம்பளி மலைக்குள் புகுந்தால் காலை எட்டு மணிக்குக் கூட எழுந்திருக்க மனம் வரவில்லை.

மலைகளின் மீது திடீரென்று எங்கும் மேகம் புகை மாதிரி கவிழ்ந்து ஒரே இருட்டாகி விடுகிறது. சடசட வென்று மழை கொட்டுகிறது. சிறிது நேரத்தில் மழைபெய்த சுவடு கூட மறைந்து விடுகிறது. கீழ் நாடுகளில் ஒரு நாளைக்கு மழை பெய்தால் சேறும் சகதியும் காய ஒன்பது நாட்கள் பிடிக்கும்.

நோயாளிகள், எவ்வளவோ தூரத்திலுள்ளவர்கள் நல்ல காற்றை உத்தேசித்து இங்கு வருகிறார்கள். இங்கே வந்தால் எந்த வியாதியும் சொல்லாமல் கொள்ளாமல் ஓட்டம் பிடிக்கும்.

மேடும் பள்ளமுமான - ஆனால் மழ மழப்பான - ரஸ்தாவில் தினம் இரண்டு முறை பெருமூச்சு வாங்க ஏறி இறங்கினால் ஊளைச் சதையுள்ளவர்கள் இளைத்துக் கெட்டியாகிவிடுவார்கள். ஒல்லியாக இருப்பவர்கள் பெருத்துவிடுவார்கள்.

கோடைக்கானலில் நடு நாயகமாக விளங்குவது ஓர் அழகிய ஏரி. இது வால்மாதிரி நீளமாக வளைந்து இருக்கிறது. இதன் சுற்றளவு நான்கு மைல் என்று சொல்கிறார்கள். உலாவ விரும்பினால் அந்த ஏரியைச் சுற்றியுள்ள பாதையில் உலாவலாம். ஏரியில் படகு விடலாம். காசு கொடுத்தும் ஜம்மென்று படகில் சவாரி போகலாம்.

சலசலவென்று ஓடும் அருவிகளும் தடதடவென்று தண்ணீரைக் கொட்டிக் கொண்டிருக்கும் நீர் வீழ்ச்சிகளும் அழகிய காட்சிகள். நான் மட்டும் ஒரு கவியாக இருந்தால் இத்தனை நாளைக்குள் கோடைக்கானலைப்பற்றி எத்தனையோ கவிதைகள் இயற்றியிருப்பேன்.

மரங்களும் செடி கொடிகளும், காய்கறித் தோட்டங்களும் பழத் தோட்டங்களுமாகக் கோடைக்கானல் மலையில் இயற்கை அன்னை ஆனந்த நிருத்தியம் புரிகிறாள். ரஸிகத் தன்மையுள்ள ஒவ்வொருவரும் கோடைக்கானலை அவசியம் பார்க்க வேண்டுமென்பது என் அபிப்பிராயம். இந்தத் தடவை இல்லாவிட்டாலும் எப்பொழுதாவது நீ இங்கே கட்டாயம் வந்து இயற்கையன்னையின் அழகை அநுபவித்துச் செல்ல வேண்டும்!

இப்படிக்கு,
உன்னுடைய தோழி,
இந்திராணி.

சீனிக் கண்ணாடி

ரமணி

"ஏய், கணேஷ்! என்னோட விளையாட வர்றியாடா? நான் புதுசா ஒரு விளையாட்டு சொல்லித் தரேன்" என்று வீட்டுக்குள்ளேயிருந்தே கத்திக்கொண்டு வாசலுக்கு ஓடிவந்தாள் மாலா.

"இதோ வந்துட்டேன்!" என்று சொல்லிக்கொண்டே மாலாவிடம் சேர்ந்து கொண்டான் கணேஷ்.

"இனிமே பத்மாவோட விளையாடக்கூடாது. அப்படிப் போனா நான் உன்னோடே பேசவேமாட்டேன்?" என்றாள் மாலா.

"இல்லை" என்றான் அவன்.

கணேஷ், மாலா இருவரும் ஒரே தெருக் குழந்தைகள். மாலாவுக்கு அவனிடம் தனி அன்பு. பள்ளிக்கூடம் போகும்போதும் வரும்போதும் மாலா காரில்தான் கணேஷ் செல்வான்.

பத்மாவும் அவர்கள் தெருவிலேயேதான் இருந்தாள். அவளைக் கண்டால் மாலாவுக்கு ஏனோ பிடிக்காது. ஆனால் கணேஷுக்கு அவளிடம் விசுவாசமும் அன்பும் உண்டு.

கணேஷ் மாலாவுடன் விளையாடப் போனான். பத்மா ஆத்திரம்

பொங்க, வைத்த விழி வாங்காது இவர்கள் விளையாடுவதையே பார்த்துக்கொண் டிருந்தாள்.

திடீரென்று தெருவில்,

"எம தரும ராசா பாரு
ஏடு எழுத்தாணி பாரு
சித்திராபுத்திரன் சீட்டைப் பாரு
அட்டைக் குழி அரணைக்குழியில்
அவங்க கிடக்கிறதைப் பாரு"

என்ற சீனிக் கண்ணாடிக்காரன் பாட்டு தாளத்துடனும், 'கிணுங் கிணுங்' என்ற மணிச் சத்தத்துடனும் அவர்கள் காதில் விழுந்தது.

"மாலா, உங்கிட்டே காசு இருக்கா, பட்டணம் பார்க்கலாம்!" என்றான் கணேஷ்.

"காசா? இல்லேடா!" என்றாள் மாலா.

"நான் பார்க்கணுமே. ஆசையாயிருக்கு. காசைத் திருப்பி நாளைக்குக் கொடுக்கிறேன்."

"ஊஹூம். என்னிடம் இல்லையே" என்றாள் மாலா.

சமயத்தை உபயோகப்படுத்திக் கொண்டு பத்மா, "இங்கே வாடா, நான் தரேன். நம்ப ரெண்டு பேரும் பார்க்கலாம்" என்று தன்னிடமிருந்த காசைக் காட்டிச் சீனிக் கண்ணாடிக்காரனை அருகில் கூப்பிட்டாள். கணேஷ் கொஞ்சமும் தாமதியாமல், "இதோ" என்று புறப்பட்டான்.

"போகாதே" என்று கத்தினாள் மாலா.

"அதனால் என்ன? நாளைக்கு அவள் காசைத் திருப்பிக் கொடுத்துவிடுவேன்" என்று ஓடிவிட்டான்.

மாலாவுக்கு ரோசமும் அழுகையும் பீரிட்டுக்கொண்டு வந்தன. 'நாளைக்கு வரட்டும்; சொல்கிறேன்' என்று முணு முணுத்துக்கொண்டே உள்ளே சென்றாள்.

படம் பார்த்த குஷியில் கணேஷுக்கு மாலாவைப் பற்றிய நினைவே வரவில்லை. மீதிப் பொழுதையும் பத்மாவுடனேயே விளையாடிக் கழித்து விட்டு அவன் வீட்டுக்குச் சென்றான்.

மறுநாட் காலையில் கணேஷ் பள்ளிக்கூடத்துக்குப் போக வாசலில் மாலாவை எதிர்பார்த்து நின்றுகொண் டிருந்தான். எப்பொழுதும் அவளுடைய கார் முதலில் வந்துவிடும். இவன் வருவதற்குத் தாமதமானால்கூட இருந்து, ஹாரனை அடித்து அழைத்துக் கொண்டு போவாள். ஆனால் ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் மாலாவின் கார் நிற்காமல் தெருவில் புழுதியைக் கிளப்பிக்கொண்டு வேகமாகச் சென்றது. கணேஷ் மட்டும், "மாலா, மாலா!" என்று கத்தினான். கார் நின்றால்தானே? மாலா மட்டும் காரிலிருந்து தலையை நீட்டிக் கையை ஆட்டிச் சிரித்தாள்.

கணேஷுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவள்மேல் கோபம் கோபமாக வந்தது. ஒன்றும் புரியாமல் வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தான்.

"ஏண்டா, பள்ளிக்கூடம் இன்னும் போகலையா?" என்ற அவன் அப்பாவின் குரல் அவன் நிலையை உணர்த்திற்று.

மறு நிமிஷம் அவன் கால்கள் நகர ஆரம்பித்தன. கொஞ்ச தூரத்தில் கடிகாரம் ஒன்று 'டிங் டிங்' என்று பதினொரு முறை ஒலித்தது. 'ஐயையோ! பள்ளிக்கூடத்துக்கு நாழியாகிவிட்டதே! கணக்கு வாத்தியார் நொறுக்கிடுவாரே!' என்ற சொற்கள் அவனையும் அறியாமலே வெளிவந்தன. கால்களும் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தன. உள்ளத்தில்

ஏமாற்றம், கோபம், பயம் எல்லாம் ஒன்று சேர்ந்து குமுறிக்கொண்டிருந்தன. பைத்தியம் பிடித்தவனைப்போல் மூலை திரும்பி ஓடினான். 'அடே, இதென்ன மோட்டார் சைகிள்! இதோ, இந்தப் பக்கம் மரம்!'

'கிரீச், ணங், கிர்ர்...!'

கணேஷுக்கு அரைமணி நேரம் கழித்துத்தான் சுய நினைவு வந்தது. தலையில் கட்டுடன் வீட்டுக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தான். மாலா தன்னைக் காரில் அழைத்துச் செல்லாது விட்டுச் சென்றது, ஒன்றும் புரியாமல் நின்றது, அப்பா அதட்டினது, பள்ளிக்கூடத்துக்கு ஓடினது, மோட்டார் சைகிள் தன் மேல் மோதினது - இவைகள் எல்லாம் அவன் மனக் கண்ணில் நிழல் படம்போல் தோன்றின. கண்ணைத் திறக்க முடியவில்லை.

ஜுரம் விடாமல் நூறு, நூற்றிரண்டு டிகிரி அடித்தது. இரவில் 'மாலா, கார், சைகிள்' என்று அடிக்கடி பிதற்றிக்கொண்டே இருந்தான் அவன்.

மாலா வழக்கம் போலப் பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்தாள். கணேசைக் கண்டால், "நடந்து வாடா அப்பா. துணைக்குத்தான் உன் சிநேகிதி பத்மா இருக்கிறாளே" என்று சொல்லி அவனை அவமானப்படுத்த வேண்டும் என்று எண்ணியிருந்தாள்.

ஆனால் நான்கு தினங்கள் கழிந்தும் கணேசை வெளியிலே பார்க்கவே முடியவில்லை. பள்ளிக்கூடத்துக்கும் வரவில்லை. மாலா கட்டிய மனக்கோட்டையும் நிறைவேறவில்லை. கணேஷ் இல்லாத பள்ளிக்கூடம், விளையாட்டு எல்லாவற்றிலும் ஒரு குறையைக் கண்டாள் அவள். அவளுக்குப் பொழுது போவதே கஷ்டமாயிருந்தது. கோபமும் பொறாமையும் தேய்ந்து அவளுடைய பிஞ்சு உள்ளத்தில் பழைய நட்பு மீண்டும் தளிர்த்தது.

மறுநாள் காலை ஒன்பது மணி. மாலா கணேஷ் வீட்டு வாசலில் காரை நிறுத்திக்கொண்டு இரண்டு மூன்று முறை 'ஹாரன்' செய்தாள். கணேஷ் வரவில்லை. வீட்டின் வாசல் பக்கத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. மறுபடியும் விடாமல் 'ஹார்ன்' செய்தாள். சற்றுப் பொறுத்து, பத்மா உள்ளேயிருந்து ஓடி வந்தாள். மாலா அவளைப் பார்த்தும்

பாராததுபோல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு விடாமல் 'ஹார்ன்' அடித்தாள்.

பத்மா கார் அருகில் ஓடி வந்தாள். "மாலா, கணேஷ்மேல் மோட்டார் சைகிள் ஏறி உடம்பெல்லாம் காயம். அதனுலே ஜுரம். உடம்பெல்லாம் தணலாகக் கொதிக்கிறது. இன்னிக்குத்தான் கொஞ்சம் தேவலே" என்ருள்.

மாலாவுக்குத் திக்கென்றது. ஆனல் அவளிடம் பொருமையால் பேசப் பிடிக்கவில்லே. "சரி சரி; நகர்ந்து போ" என்று சொல்லிக்கொண்டே 'படார்' என்று கதவைத் திறந்துகொண்டு வீட்டுக்குள்ளே ஓடினுள்.

வெளி வராந்தாவில் கட்டிலில் படுத்திருந்தான் கணேஷ். நெற்றியில் கட்டுப்போட்டு ஒரு கண் மட்டும் அரைகுறையாகத் தெரிந்தது. மாலாவுக்கு அவனைப் பார்த்ததும் 'சொரக்' என்றது.

"கணேஷ்!" என்று அன்பும் ஆதங்கமும் ததும்பக் கத்திக்கொண்டே அவன் பக்கத்தில் கட்டிலில் ஓடிப்போய் உட்கார்ந்தாள். பத்மாவும் ஓர் ஓரமாய் உட்கார்ந்தாள்.

"கணேஷ், இதெல்லாம் என்ன கட்டுடா? ஏன் இப்படி? உடம்பெல்லாம் அனலாகக் கொதிக்கிறதே! உனக்கு உடம்பு சரியில்லே என்று எனக்குத் தெரியாதுடா...உன்னே அன்னிக்கு நான்..." என்று முடிக்காமல் விக்கினுள் மாலா.

"ஏன் மாலா அழறே?"

"இல்லே. அன்னிக்கு உன்னே..." அவளால் பேச்சை முடிக்க முடியவில்லே. துக்கம் தொண்டையை அடைத்தது.

கணேஷ் மெதுவாக மாலாவைப் பார்த்தான். "அன்னிக்கு நீ காரில் போனபிறகு எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. பள்ளிக்கூடத்துக்கு நாழியாகிவிட்டது; ஓடினேன். போன வேகத்தில் மோட்டார் சைகிள் ஒன்று மேலே ஏறிவிட்டது. அவ்வளவுதான்! நான் கண் விழித்துப்பார்த்தபோது பத்மாதான் அருகில் உட்கார்ந்துகொண்டிருந்தாள்" என்று கூறினுன். மறுபடியும் ஏதோ நினைத்துக்கொண்டவன் போல, "மாலா பத்மா இல்லாவிட்டால் எனக்கு உடம்பே குணமாகி இருக்காது. நாலு நாளாக அவள் வீட்டிற்கே சரியாகப் போகவில்லே. பாவம்" என்று பரிதாபமாகக் கூறினுன் கணேஷ்.

"கணேஷ், என்னே மன்னித்துவிடுடா; நான்தான்டா நீ அடிப்பட்டதுக்குக் காரணம்.." என்று விக்கி விக்கி அழுதாள் மாலா.

"ஏன் மாலா அழறே? உன் மேலே என்ன தப்பு? நான்தான் பாதியிலே......"

"ஒன்றும் இல்லே, மாலா! நான் தான் தப்புப் பண்ணினேன். அன்னிக்குச் சீனிக் கண்ணுடிக்காரன் வந்தபொழுது நீங்கள் விளேயாடாமல் செய்தேன். அதனுல்தானே நீ அவனேக் காரில் ஏற்றிக்கொள்ளாமல் போனுய்? என்னே மன்னித்துவிடு" என்று மாலாவின் கைகளேப் பிடித்துக்கொண்டு கெஞ்சினுள் பத்மா. மாலாவின் கண்களில் ஜலம் தளும்பிக்கொண்டிருந்தது. அந்தக் காட்சியைக் கண்ட கணேஷுக்கு ஜுரமெல்லாம் பறந்துவிட்டதுபோல் இருந்தது. ஒரே வாரத்துக்குள் அவன் குணமடைந்துவிட்டான்.

கேட்டீர்களா!

ராஷ்டிரபதி நேரு

காங்கிரஸின் தலைவராக இருந்த டாண்டன் ராஜிநாமாச் செய்து விட்டார். பிரதம மந்திரி நேருவே காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆறாம் ஜார்ஜ்

பிரிட்டிஷ் அரசர் (முன்பு இந்தியாவுக்கும் சக்கரவர்த்தியாக இருந்த) ஆறாம் ஜார்ஜ் மன்னரின் உடல் நிலை இருதய நோயினால் சென்ற ஒரு மாதமாக மிகுந்த கவலைக்கிடமாக இருந்து வருகிறது.

புதிய தொழிற்சாலை

சென்னைக்கு அருகிலுள்ள அம்பத்தூரில் ஒரு புதிய சைகிள் தொழிற்சாலையை டி. ஐ. சைகிள் கம்பெனியார் நிறுவியிருக்கிறார்கள். தென்னிந்தியாவிலேயே 'ஹெர்குலிஸ்' சைகிள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைக்கப்பட்ட ஸ்தாபனம் இது.

புதிய தேர்தல்

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு நடக்கும் முதல் பொதுத் தேர்தல் வரப்போகிறது. சென்னை ராஜ்யத்தில் 1952 ஜனவரி 2-ஆம் தேதியிலிருந்து நடைபெறும். 21 வயது பூர்த்தியான ஆண், பெண் அனைவருக்கும் ஓட்டளிக்கும் உரிமை உண்டு.

செலக்‌ஷன் பரீட்சை

எஸ் எஸ் எல். ஸி. வகுப்பில் தேர்வுப் பரீட்சையை மறுபடியும் அமலுக்குக் கொண்டு வருவதுபற்றிச் சென்னை சர்க்கார் ஆலோசித்து வருகிறார்கள்.

காந்தி ஜயந்தி

அக்டோபர் 2-ஆம் தேதி காந்தி ஜயந்தியை முன்னிட்டுத் தபால்-தந்தி இலாகா காந்திஜியின் படங்கள் போட்ட மூன்று கார்டுகளை ஹிந்தியில் அச்சிட்டு வெளியிடுகிறார்கள்.

குழந்தை எழுத்தாளர் சங்கம்

சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூலில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் அக்டோபர் முதல் வாரம் ஒரு பத்திரிகை, புத்தகங்கள் கண்காட்சி நடைபெறும்.

சிறுவர் தினம்

மயிலாப்பூர், சிவாஜி சாரணர் சங்கத்தார் 4-10-51 அன்று சிறுவர்கள் தினம் கொண்டாடுகிறார்கள். நாடகம், சிங்கநாதம், விளையாட்டு, பாட்டு எல்லாம் உண்டு.

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரை) 'மூட்டை'



சாதுப் பிள்ளை

'சுண்டு'

பாலு ரொம்ப விஷமக்காரப் பையன். தினம் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது வம்புச் சண்டைகள் இல்லாமல் வீடு வந்து சேர மாட்டான். அன்று பாலு மிகவும் சாதுவான பிள்ளை போல் மாலை ஐந்து மணிக்கே வீட்டுக்கு வந்துவிட்டான்.

"என்னடா பாலு? இன்னிக்கு ஒண்ணும் வம்புகள் கிடையாதா? ஏன் இவ்வளவு சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிட்டாய்?" என்றேன் நான்.

"அதெல்லாமில்லை, அண்ணா! பரீட்சை வந்துடுத்தே. அதனாலே இனிமே விளையாடக்கூடப் போகாமே படிக்கப் போறேன்" என்றான் பாலு, ரொம்ப அடக்கமாக.

பாலுவா இப்படிப் பேசுகிறான் என்று என் காதுகளை என்னால் நம்பவே முடியவில்லை. மறுபடியும் அவன், "இனிமே அண்ணா, பரீட்சை முடிகிற வரையில் பள்ளிக்கூடம் விட்டால் வீடுதான். துஷ்டப் பையன்களுடன் இனிமேல் சேரவே மாட்டேன்" என்றும் சொன்னான்.

'சரி சரி; பார்ப்போம்' என்று எண்ணிக்கொண்டு, சற்று வெளியில் உலாவிவிட்டு வரலாம் என்று கிளம்பினேன். சிறிது தூரம் சென்றதும் ஒரு பையன் வேர்க்க விறுவிறுக்க, தலைகால் தெரியாமல் ஓடிவந்தான். வந்த வேகத்தில் கால் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டான் அந்தப் பையன். நல்ல வேளையாக கீழே மணல்; அடிபடவில்லை. நான் அவனைப் போய்த் தூக்கி, மண்ணையெல்லாம் தட்டிவிட்டேன்.

பாலுவின் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த கோபு தான் அவன். கோபு என்னைப் பார்த்துவிட்டு, "மாமா, உங்க வீட்டுப் பாலு என்ன செய்தான், தெரியுமா? பாருங்க! அவன் என் புதுப் பேனாவை எடுத்து ஒடித்துவிட்டு, ரொம்பச் சாதுபோல் அதைத் தெரியாமல் மூடிக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டான். வீட்டுக்குப் போனதும் தான் நான் அதைப் பார்த்தேன். எங்கப்பா என்னைக் கொன்றுவிடுவார். எனக்கு வேறே வாங்கிக்கொடுங்கள். கொடுத்தால் தான் போவேன்" என்று அழத் தொடங்கிவிட்டான்.

இப்பொழுதுதான் பாலுவின் சாதுத்தனத்துக்குக் காரணம் புரிந்தது. கோபுவைக் கடைக்கு அழைத்துக் கொண்டுபோனேன். வேறு பேனா ஒன்று வாங்கிக்கொடுத்தேன். பாலு என் கண்ணிலேயே படவில்லை.

அசட்டுப் பிசட்டுப் பாடல்

பாக்கியலக்ஷ்மி

குழிந்த கன்னம்,
குறு குறு விழிகள்,
பவளச் செவ்வாய்,
பால்போற் பற்கள்;
அகன்ற நெற்றி,
சுருண்ட கேசம்,
கடைந்த கைகள்,
திரண்ட கால்கள்;
மருவில் வண்ணம்,
மாசில் மேனி,
அன்னையின் கண்மணி,
ஆசைச் செல்வம்,
அழகுப் பாப்பா!
அது யார்? நீயோ!

சிலோனில் மலர்

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம். தீபாவளி மலர் வருகிறது என்று தெரிந்ததும் என் சந்தோஷத்தைக் கேட்க வேண்டுமோ? அப்படியே துள்ளிக் குதித்தேன். என்ன என்ன கதைகள் போடப் போகிறீர்கள்? நல்ல நல்ல படம் எல்லாம் போடுங்கள். நான்கூட ஒரு கதை எழுதலாம் என்று இருந்தேன். ஆனால் போடுவீர்களோ மாட்டீர்களோ என்று எழுதவில்லை. இலங்கைக்கு நம் கண்ணன் மலர் தீபாவளி அன்றே கிடைக்கும்படி செய்வீர்களா?

—வி. சண்முகநாதன், கொழும்பு-11.

(இந்தியாவில் தீபாவளி மலர் என்று விற்பனைக்குக் கிடைக்குமோ அன்றே உங்களுக்கும் கிடைக்கும்படிச் செய்வதற்காக நானே துள்ளிக் குதிக்கப் போகிறேன். ஆ-ர்.)

* * * *

துணுக்கு

என் அன்புள்ள அண்ணாவுக்கு, அநேக வணக்கம். இதோ ஒரு ஹாஸ்யத் துணுக்கு! ஒருநாள் டிராயிங் மாஸ்டர் போர்டில் இரண்டு பறவைகளின் படத்தை வரைந்தார். இவைகள் என்ன பறவைகள் என்று எங்களைக் கேட்டார். நாங்கள் யாரும் உடனே பதில் சொல்லவில்லை. "சரி, இதில் எது காக்கை, எது குருவி?" என்றார். படம் ஒரே அளவில் இருந்ததால் எல்லாரும் மறுபடியும் திருதிரு என்று விழித்தோம். ஒரு பையன் மட்டும் எழுந்தான். "சார், சார்! காக்கைக்குப் பக்கத்தில் இருப்பது குருவி, சார்!" என்றான். எல்லாரும் சிரித்தோம். "சரி; நீ கொஞ்சம் என் பக்கத்தில் வந்துவிட்டுப் போ" என்று பிரம்பை எடுத்துக்கொண்டார் டிராயிங் மாஸ்டர்! துணுக்கு எப்படி?

—C. சுப்பிரமணியன், மதுரை.

(புதிதாகப் போட்ட தனுக்கு என்றால் கொஞ்சம் சூடாக இருக்குமே! இது ரொம்பப் பழசு மாதிரி ஆறிப் போயிருக்கிறதே! ஆ-ர்.)

* * * *

ஒரு தலை - நாலு சிங்கம்

எஸ். பி., பம்பாய்

* * *

அன்புள்ள ஐயா,

வணக்கம். எமது கிளைக் கழகத் திறப்பு விழாவின் பொழுது எடுத்த புகைப்படங்களனைத்தையும் சென்ற மாதம் பதிவு தபால் மூலம் அனுப்பினேனே, வந்து சேர்ந்ததா, இல்லையா? எம்மாதக் கண்ணனில் பிரசுரிப்பீர்கள்?

—கண வள்ளியப்பன, கிளைக்கழக உபதலைவன், குருநாகல் (இலங்கை).

(படங்களனைத்தும் வந்து சேர்ந்தன. அவ்வளவு படங்களையும் எங்ஙனம் பிரசுரிக்க முடியும்; சாத்தியமில்லையே என்று தான் யோசிக்கிறேன். ஆ-ர்.)

* * *

மதுரைக் கூட்டம்

அன்புள்ள மாமாவே, வணக்கம்.

தீபாவளி ஏன் வருகிறது என்று தான் எனக்குக் கோபம் கோபமாய் வருகிறது. தீபாவளி வருகிறது என்று தானே மலர் தயாரிக்க உட்கார்ந்துவிட்டீர்கள். அதனால்தானே எங்கள் ஊரில் போடப்போகும் கூட்டத்தை ஒத்திப்போட்டுவிட்டீர்கள். அதற்காக நீங்கள் இப்படிச் செய்யலாமா?

—ம. கோ. சவுரிமுத்து, சிம்மக்கல், மதுரை.

(தீபாவளியை என்னால் ஒத்திப்போட முடியாததனால் தான் கூட்டத்தை ஒத்திப்போட வேண்டியிருந்தது. அதனால் தானே நீ இப்படி என்னிடமும் தீபாவளியிடமும் கோபித்துக் கொள்கிறாய். ஆ-ர்.)

*　　　*　　　*

மாருதி

ஒரே கோட்டில் வரைந்த படம்

நவராத்திரிக் கொலு

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

வந்தனம். எங்கள் வீட்டில் பெண் குழந்தை இல்லை. பொம்மை நிறைய இருக்கிறது. அதனால் நானே கொலுவைக்கப் போகிறேன். சுண்டல், வடை எல்லாம் கொடுக்கப் போகிறேன். கண்ணன் கழக நண்பர்கள் தாராளமாக வரலாம்.

—G. சுந்தரராஜன், சென்னை. 1

(வேண்டாம் அப்பா! கூப்பிடாதே! சென்னையில் மட்டும் 1800-பேருக்குமேல் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அப்புறம் சுண்டலை ஒவ்வொன்றாய் எண்ணிக் கொடுக்கவேண்டியதாகி விடும். ஆ-ர்.)

பேனா

அழகான சிவப்புப் பேனா
அருமையாக எழுதும் பேனா
கற்பனைக் குகந்த பேனா
கடுகைப்போ லெழுதும் பேனா
கைராசி உள்ள பேனா
கண்டோரை மயக்கும் பேனா
எல்லாம் செய்யும் பேனா
என்னுடைய பார்க்கர் பேனா

—தேவராஜ், ஷண்முகநாதபுரம்.

* * *

பொழுதுபோக்கு விடைகள்

இ. வ.

1. வீணை.
2. கத்தி.
4. அடுப்பு.
6. பல்லி.
7. மான்.
8. செக்கு.
9. தெரு.
12. [illegible]
13. எட்டு.

மே. கீ.

1. வீடு.
3. திருடன்.
4. அகல்.
5. புலி.
6. படம்.
8. செருப்பு.
9. குடை.
10. தென்னை.
11. பூட்டு.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

1. சபாபர்னம், மலேயா:
உபதலைவர்கள்: N. V. தாசன், நா. ரங்கன்.
செயலாளர்கள்: V. கிருஷ்ணன், கோ. கோபாலன்.
பொருளாளர்கள்: பூ. சுப்பிரமணியன், ம. பாப்பு.

பதினேழு பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட விருக்கிறது.

2 மயிலாப்பூர்-I:
உபதலைவர்: M. சங்கரன் (V. 55)
செயலாளர்கள்: V. A. சுந்தரமூர்த்தி, (S. 356) A V. ரகுராமன் (R. 200)
பொருளாளர்: R. வேங்கடாசலம் (R. 666)

20 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. 'வாணி' என்னும் கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3 புதுச்சேரி:
உபதலைவர்: S ஜயசேகரன் (J. 192)
செயலாளர்: S. சுமதி (S. 32)
பொருளாளர்: S ரேணுகா (R. 633)

'பொழுது போக்கு' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4. வண்ணாரப்பேட்டை, சென்னை 21:
உபதலைவர்: E. P. V. ஸ்ரீராமுலு (S. 69)
செயலாளர்: L. வீராசெட்டி (V. 135)
பொருளாளர்: S. சுப்பிரமணியன் (S. 865)

பத்துப்பேர் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. 'அறிவுச் சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

5. கானூர்:
உபதலைவர்: S. மீனாக்ஷிசுந்தரம்.
செயலாளர்: C. ராமசந்திரன்.
பொருளாளர் S. திருப்பதி.

இருபது அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

6. மயிலாப்பூர்-II:
உபதலைவர்: S. ஜயலக்ஷ்மி (J. 6)
செயலாளர்: M. ரகுபாய் (R. 253)
பொருளாளர்: S. கனகவல்லி (K. 73)

பதினாறு அங்கத்தினர்கள் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது மேலும் சேர விரும்பும் பெண் குழந்தைகள் S. ஜயலக்ஷ்மி, 3, கேசவபெருமாள் சந்நிதித் தெரு, மயிலாப்பூர், சென்னை-4 என்ற விலாசத்துக்கு எழுதியோ, நேரிலோ விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

ஆலப்புழை: கண்ணன் கிளைக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள விரும்பும் அங்கத்தினர்கள் P. நாராயணன், c/o S. K. P. ஐயங்கார், முல்லன் ரோடு, ஆலப்புழை என்ற விலாசத்துக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

* * *

தஞ்சாவூர்: இதுவரையில் கண்ணன் கிளைக் கழகத்தில் சேராத அங்கத்தினர்கள் L. கிருஷ்ணமூர்த்தி, 1, மாட்டு மேஸ்திரி சந்து, தஞ்சாவூர் என்ற விலாசத்தில் விண்ணப்பித்துக் கொள்க.

REG. No. M. 5542

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்காக என்று திட்டமிட்டு நல்ல ஸ்வாரஸ்யமான கதைகளாகப் பொறுக்கிச் சில புத்தகங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். இந்தப் புத்தகங்களில் நிறையப் படங்கள் இருக்கின்றன. உங்கள் மனத்தைக் கவரும் கதைகள்.

இப்போது தயாராக இருக்கும் புஸ்தகங்கள் :

1. **ராஜாவும் குருவியும்** "சோமசன்மா" அணா 8

ராஜாவும் குருவியும், ஆமையும் முயலும், காளையும் நாயும், நாயும் நிழலும், பிராமணனும் பொன் காப்பும், நரியும் திராட்சையும், சுண்டெலியும் சிங்கமும் என்ற ஏழு கதைகளின் தொகுதி.
இதே பெயரில் நீங்கள் படித்திருக்கும் பழைய கதைகளல்ல இவைகள். படித்துப் பாருங்கள்.

2. **கழுகும் கிளியும்** "சோமசன்மா" அணா 8

கழுகும் கிளியும், ஏமாறுத் காக்காய், நண்டும் கொக்கும், புலித்தோல் போர்த்த கழுதை, குரங்கும் ஆப்பும், காக்கையின் தாகம், கழுதையும் நாயும் என்ற ஏழு புதுக் கதைகளின் தொகுதி.

3. **தவளையும் காளையும்** "சோமசன்மா" அணா 8

தவளையும் காளையும், நாவல் மரத்துக் குரங்கு, கூடா நட்பு, ஓநாயும் ஆட்டுக் குட்டியும், குரங்கு நியாயம் என்ற ஐந்து புதிய கதைகள்.

4. **கோழி விதைத்த நெல்** "சூடாமணி" அணா [illegible]

பாட்டுக் கதை.

5. **தங்கத்தின் பந்து** "சூடாமணி" அணா 3

தங்கத்தின் பந்து, சண்டை போட்ட நாய்க்குட்டிகள், காட்டுப்பூனையும் குழந்தையும் என்ற மூன்று கதைகள்.

6. **என் பேர் என்ன?** "சூடாமணி" அணா 3

பாட்டுக்கதை.

கண்ணன் [illegible] 121% [illegible]